ஜெ. லோகநாதன்

தென்றல்

ஆசிரியர் — கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3	சென்னை	14—7—56	சனிக்கிழமை	இதழ் 4

ஈழங்கொண்ட இராசாதி ராசன்

கி. பி. 1166-ல் சோழ மண்டலத்தின் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டான் இரண்டாம் இராசாதிராசன். இராசராசனுக்கு அடுத்தபடி பட்டத்துக்கு வந்த இவனது ஆட்சியில் சோழமண்டலத்தின் வீர வரலாறு உறுதிப்படுத்தப்பட்டது. போரில் புறங்கண்ட செய்தியே இவனது வரலாற்றிலில்லை. தொடுத்த போரிலெல்லாம் கிடைத்திருக்கிறது வெற்றி.

இவன் காலத்தில் பாண்டிய நாட்டில் மதுரையில் குலசேகர பாண்டியனென்பானும், பராக்கிரம பாண்டியனென்பானும் [illegible] தகராறு எழுந்தது. அதனால் அவர்களிருவரும் இரு வேறு திசைகளிலிருந்து படை திரட்டி ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டிருந்தனர். அப்போது மதுரை நகரை பராக்கிரமபாண்டியன் தான் ஆண்டுகொண்டிருந்தான். குலசேகரபாண்டியன் வேறு பகுதிகளில் படை சேர்த்து மதுரை நகரை முற்றுகையிட்டான். இந்த முற்றுகை அடிக்கடி நடந்ததாலே பராக்கிரம பாண்டியனுடைய படைகள் களைத்தன.

குலசேகர பாண்டியனோடு மதுரைப் படைத்தலைவர்கள் சிலர் [illegible] பராக்கிரம [illegible] [illegible]

பெரும் படையொன்று பாண்டிய நாட்டுக்கு [illegible] [illegible]

— 6ம் பக்கம் —

எல்லாம் குழப்பம்; சொன்னல் கலக்கம்!

(3)

“எப்படி, முரண்பாட்டை, கொள்கை விளக்கத்தை நிர்ணயிக்கவேண்டும்?” என்பதற்கும் ஜீவானந்தம் இலக்கணம் தருகிருர். ரஷ்யாவிலிருந்து நேரடியாகத் தனிப் பாடம் பெறக்கூடியவராகையால், அந்த ‘ரஷ்ய இலக்கணம்’ என்ன என்பதையும் நாம் கூர்ந்து கவனிக்கவேண்டியது அவசியம்!

“நிகழ்ச்சிகளேயும் எதிரொலிகளேயும் நிதானமாகக் கணக்கிலெடுத்து, அடிப்படைக் கொள்கை, வகுத்துக்கொண்ட திசை வழி, நடைமுறைத் தந்திரம் ஆகியவற்றிற்கு இணக்கமாக இருக்கின்றனவா என்று சீர்தூக்கி, முன்னுக்குப்பின் முரண்பாடுகளேப்பற்றிக் கூற முந்தவேண்டும்” என்கிருர். இதுதான் முரண்பாட்டு ஆராய்ச்சி இலக்கணம் (Made in Russia !) இதில் தி. மு. க. வுக்கு ரத்த சம்பந்தம், அர்த்த சம்பந்தம், திக்கு சம்பந்தம் எதுவும் கிடையாது என்கிருர், இந்த மகா மேதை! எந்த ஒரு பிரச்சினையிலும் முடிவை நிர்ணயிப்பதற்கு, தாமே ஒருமுறையான பாதையை வகுத்துக்கொண்டு நடப்பவர்கள் இந்திய உபகண்ட அரசியலிலே தி. மு. கழகத்தினர்தான்! அவர்களுக்கு, “அண்டர் கிரவுண்ட் அரசியல்” மேதைகள் இலக்கணம் சொல்ல வருகிருர்கள்.

ஜீவானந்தம் சொல்லும் ரஷ்ய இலக்கணத்தின்படியே,

(1) கம்யூனிஸ்டுக் கட்சியின் (ஆண்டுவாரி) நிகழ்ச்சிகளேயும் நிதானமாகக் கணக்கில் எடுத்தார் சம்பத்.

(2) அடிப்படைக்கொள்கையை—அதே கோணலோடு - எடுத்துக் காட்டினுர் சம்பத்.

(3) வகுத்துக்கொண்ட திசை வழியில் அவர்கள் திக்குமுக்காடியதைத் தெளிவுறச் சொன்னுர் சம்பத்.

(4) நடைமுறைத் தந்திரம் என்ற பெயரிலே அவர்கள் காலித்தனத்தில் இறங்கியதையும் சாடையாகக் குறிப்பிட்டார், சம்பத்.

—இத்தனே பகுதிகளேயும் அவர் சேர்த்துக்கியதுமே, இவற்றில் காணப்பட்ட கம்யூனிஸ்டுகளின் கொள்கை முரண்பாட்டைத் தாங்களே உணர்ந்து கைதட்டினர் பொது மக்கள். ஆம்; ஆராய்ந்தார் சம்பத்; அதிலே தோன்றிய முடிபினே உடனே கண்டனர் பொது மக்கள்!

“முரண்பாடுகளேக் கணிக்கும் வகையில், தி. மு. க. தலேமைக்கு இரத்த சம்பந்தம், திக்கு சம்பந்தம், அர்த்த சம்பந்தம் எதுவும் கிடையாது” என்கிருர் ஜீவானந்தம்.

ஜீவானந்தம் போன்ற கம்யூனிஸ்டுத் தலேவர்களுக்கு இதில் உள்ள சம்பந்ததைக் காட்டிலும் தி. மு. க. ஆட்களுக்கு அதிக சம்பந்தம் உண்டு. காரணம் அச்சடித்து வந்த கொள்கைகளே அப்படியே ஒப்புவிக்கும் கிளிப்பிள்ளேகளல்ல, தி. மு. கழகத்தவர். சுய சிந்தனேயிலேயே ஒவ்வொன்றையும் கண்டுபிடிப்பவர்கள். அரசியலிலும் சரி, இலக்கியத்திலும் சரி, முரண்பாடுகளேத் தெள்ளத் தெளியக் கண்டுபிடித்துச் சொல்பவர்கள் தி. மு. கழகத்தவர்தான் என்பதை அறிவுள்ள மக்கள் அறிவார்கள்.

கம்யூனிஸ்டுகளின் கொள்கை முரண்பாடு பற்றி, சம்பத் பேசியது தப்பும் தவறுமாக இருந்திருக்குமானல், அதைப் பற்றிக் கம்யூனிஸ்டுக் கட்சி இவ்வளவு கதறவேண்டிய அவசியமில்லே. உள்ளுக்குள்ளே கிடந்த ரகசியங்களே, பலர் அறியாத செய்திகளே அள்ளித் தந்தார் சம்பத், என்பதாலேதான் ஜீவானந்தங்கள் எண்ணிக்கை போட்டுத் தங்களேக் காத்துக் கொள்ள வேண்டிய அவசியத்திற்கு வந்திருக்கிருர்கள்.

தண்டவாளம் பெயர்த்ததுதான் தியாக காலமா?

★

‘கொள்கைக் குழப்ப’த்துக்குப் பதில் சொல்ல வந்த ஜீவானந்தம் ஏகாதிபத்திய எதிர்ப்பாக, தாங்கள் செய்த வீர(!)ச் செயல்களேயும் எடுத்த மண்வெட்டிகளேயும், வெட்டிய வெட்டுக்களேயுமே அதிகமாக வர்ணிக்கிருர். ஒரு காலத்தில் நாங்களும் உத்தமிகள் மாதிரி இருந்தோமே அது தெரியுமா உங்களுக்கு?—என்பதுபோல் கேட்கிருர்!

கொள்கைக் குழப்பத்திலிருந்து, ஏகாதிபத்திய எதிர்ப்புக் காலத்துக்கு ஜீவானந்தம் பாய்ந்ததன் நோக்கம், அந்த இடத்திலே தி.மு.க. வைச் சிண்டுப் பிடியாய்ப் பிடித்து விடலாம் என்பதுதான் என்பதை, அவரது எழுத்துக் காட்டுகிறது. ஏகாதிபத்திய காலத்தில் கம்யூனிஸ்டுக்கட்சி, சுடுகாட்டிலே எலும்பு ‘பொறுக்கிய’போது, தி. மு. கழகத்தவர்களின் தாய்க்கட்சி, அமெரியின் நிழலிலே அமர்ந்திருந்தது—என்கிருர். கட்சிக்காரனேச் சாகடிப்பதைவிட, செத்துப்போனவனேக் கட்சிக்காரனுக்குவதில் கம்யூனிஸ்டுக் கட்சி, மிகவும் கெட்டிக்காரத்தனமாக நடந்துவந்த காலம், ஏகாதிபத்திய எதிர்ப்புக்காலம். அந்த நாளிலே கம்யூனிஸ்டுக் கட்சியின் உள்ளார்ந்த நோக்கம், தாய்நாட்டின் விடுதலேயல்ல; வெள்ளேக்காரனேக் கொண்டுவந்து வைப்பதுதான்! இதனே, அந்நாளில், சோஷலிஸ்ட் மனப்பான்மைகொண்டவர்களே ஆதாரங்களோடு விளக்கினுர்கள். தி. மு. க.வின் தாய்க் கட்சி, ஏகாதிபத்திய எதிர்ப்பில் கலந்து கொள்ளாமல் இருந்தது உண்மையாக இருக்கலாம். ஆனல், அதே நேரத்தில், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் இடையிலே புகுந்து கலகம் விளேவித்து, போராட்டங்களேப் பாழ்படுத்தியவர்கள் கம்யூனிஸ்டுகள்தான் என்பதை ‘இந்திய சுதந்தர வரலாறு’ நமக்குத் தெளிவாகச் சொல்கிறது.

கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதான நோக்கம், கலகம்!—ஆம்; எங்கும் எப்போதும் கலகம் நடந்துகொண்டிருக்க வேண்டும்! அப்படி நடந்தால்தான், கம்யூனிஸ்டுக் கட்சிக்குப் பிழைப்பு நடக்கும்! ஏகாதிபத்திய எதிர்ப்பிலும் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரவு செலவுக் கணக்கு விரிவடைந்ததே தவிர, அவர்கள் சாதித்த சாதனே எதுவுமில்லே. காங்கிரசின் சாதனேயை - அன்று பட்ட கஷ்டத்தை—தி. மு. க. உட்பட எல்லாக் கட்சிகளுமே ஒப்புக்கொண்டு பேசுகின்றன. ஆனல், ஏகாதிபத்திய எதிர்ப்பில் கம்யூனிஸ்டுக் கட்சியின் பங்கு பற்றி, கம்யூனிஸ்டுக் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியினரும் கூறுவதில்லே. காரணம், ஏகாதிபத்திய எதிர்ப்பை மூல நோக்கமாகக் கொண்டு, போராட்டத்தைத் ‘துவக்கிய’வர்களல்ல அவர்கள். நடந்த போராட்டங்களில் ‘புகுந்து’ கெடுத்தவர்கள். ஆள் பிடிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தவர்கள். அந்தப் போராட்டக் காலத்திலேயே இதைப் பகிரங்கப்படுத்தி, காங்கிரஸ்காரர்கள் கம்யூனிஸ்டுகளின் மூக்கை உடைத்தார்கள்.

“நாங்கள் கஷ்டப்பட்டோம்; நாங்கள் கஷ்டப்பட்டோம்” என்று பேசுவதன்மூலமும் எழுதுவதன் மூலமுமே கம்யூனிஸ்டுகள் கஷ்டப்படுகிருர்களே தவிர உண்மையில் அவர்கள் செய்தது என்ன? சந்தர்ப்பம் பார்த்து ‘ரவுடி’த்தனத்தில் இறங்கினுர்கள். அதைப் ‘புரட்சி’ என்ருர்கள். அந்தக் காலித்தனங்களுக்குத் தண்டனேயை அனுபவித்தார்கள். அதனேத் தியாகம் என்கிருர்கள். நகையை அறுத்துக்கொண்டு ஓடிய திருடன், அடிபட்டு உதைபட்டு அவதிப்படுகிருன்—அதைத் தியாகம் என்கிருன்.

கன்னம் வைத்தவன், தண்டனே பெறுகிருன். அதை தேசியத்தியாகம் என்கிருன்.

—உண்மையில், கம்யூனிஸ்டுகள் அன்று கொள்ளே, கொலே, பலாத்காரத்தில் இறங்கியதே, கட்சி நோக்கத்துடனேயே தவிர நாட்டு விடுதலே நோக்கத்தோடு அல்ல. அதனுல்தான் இந்திய உபகண்டத்து விடுதலே வரலாற்றில் அவர்கள் இடம்பெறவில்லே.

இப்போதும், தோழர் ஜீவானந்தம் குறிப்பிடுகிற, ‘அடிபட்டுஇறந்த’ வீரர்கள், காங்கிரஸ்காரர்களாகக் காணப்படுகிருர்களே தவிர, கம்யூனிஸ்டுகளாக இல்லே! “செத்துப்போனவன் கட்சியின் உறுப்பினன்” என்கிற கம்யூனிஸ்டுத் தத்துவப்படி திருப்பூர்க் குமரனேயும் பகத்சிங்கையும் தோழர் ஜீவானந்தம் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்த்திருக்கிருரோ என்னவோ தெரியவில்லே.

—இந்த வாதத்தில் - அதாவது ஏகாதிபத்திய எதிர்ப்பில் கம்யூனிஸ்டுகளின் பங்கு என்ற பகுதியில் தோழர் ஜீவானந்தம் தங்களது பழம் பெருமைகளே (!) நிலேநாட்ட முயல்கிருர். ஆனல், பரிதாபமாக ஏகாதிபத்திய எதிர்ப்பு வரலாறு அவரைக் கலகக்காரராகவும் போராட்டங்களேக் கெடுத்தவராகவுமே காட்டுகிறது. என்னதான் மூடி மறைத்தாலும் இந்த நாற்றத்தை அவர் மறைக்கமுடியாது.

—கண்ணதாசன்.

(தொடரும்)

திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் வள்ளுவராண்டு 1987, ஆனித்திங்கள் 31-ம் நாள் (14-7-56) சனிக்கிழமை மாலே சென்னே அரண்மனேக்காரத் தெரு, கோகலே மண்டபத்தில் மாலே 5 மணியளவில் நாவலர், இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள் தலேமையில் நடைபெற விருக்கும் எங்கள் வாழ்க்கை ஒப்பந்த விழாவில் தாங்கள் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஏ. கே. வில்வம்,	அருண்மொழி, B. O. L.
துணையாசிரியர், “முரசொலி”	15. பி. பி. தெரு,
சென்னே-6.	சென்னே-6,

அரண்மனையில்

பற்பல வனப்பும் கண்டு
பாண்டியன் எழிலும் கண்ட
அற்புத நகையாள் கொண்ட
அளவிலா மகிழ்வைப் போலும்
சிற்பிகள் வடித்த தங்கச்
சிலையெலாம் சிரிக்கும் மாடத்(து)
உட்புறம் வந்தாள் ; கண்ணுல்
உண்டவன் பின்னல் வந்தான் !

ஐம்பெருங் குழுவும் எண் பே(ர்)
ஆயமும் படைந டாத்தும்
செம்பியன் தாமும், வந்து
சிரம்பதந் தழுவத் தாழ்ந்து
"எம்பெரு மன்னு வாழ்க !
எந்தையின் மனையே வாழ்க !
தம்புகழ் வளர்க !" என்றுர்
தங்கமும் வணங்கிப் போனுள் !

மாதரார் புருவம் போலும்
வளைவெலாம் கொண்ட மாடம்
தீதிலா உள்ளம் போலும்
சிரித்திடும் வெண்மை யோடும் !
காதலால் இணைந்த சோழக்
காரிகை மீனன் தம்மை
காதுலாங் கண்ணுற் கண்டு
கனிந்தனள் மகிழ்வி னேடும் !

காலம் நடந்தது !

பகலிலே புறநா னூறும்
பள்ளியில் அகநா னூறும்
முறையினுள் உறவிற் கண்டான்
மூச்செலாம் பேச்செல் லாமும்
நகையுலாம் மனையா ளாக
நலமிகுத் திருந்தாள் ; பொல்லாப்
பகைவர்போற் கலவிப் போரில்
பருகினர் அமுதம், பன்னுள் !

போர் முரசு !

"இன்பநிலா மாடத்து இழைந்த காலம்
இத்தோடு முடியட்டும்" என்பர் போல
வன்பகையார்-சேரத்தார்-வளைந்த வில்லை
வான்மிதக்கும் கொடியினிலே பூட்டி
நின்றுர்-
"என்பகையே ! வா !" வென்றுர் ;
மீன வேந்தை
இழிசொல்லால் படுபோருக் கழைத்து
விட்டார்!
தன்பலத்தை நன்ருக அறிந்த பாண்டித்
தார்வேந்தன் இன்முகத்தோ டதனை
ஏற்ருன் !

"வங்கத்தார் மார்பினிலே நாங்கள் போட்ட
வடுவின்னும் மாறவில்லை ! புறங்கொ டுத்து
அங்கத்தார் போனகதை அறிய மாட்டீர் !
அடுகளத்துக் குருதியிலே குளிக்கும் இந்தச்
சிங்கத்தை உசுப்புகிறீர் ! வாளெ டுத்தால்
சிரம்வேறு உடல் வேறு என்ப தல்லால்
தங்கத்தார்-பாண்டியர்கள்-அமர்வ தில்லை !
சாவுக்கே வருகின்றீர் ! வாரும் !" என்ருன் !

வில்லவனை, ஆரியனும் வேத நாதன்
வெஞ்சினத்தில் தள்ளியதால் மதுரை நாட்டு
நல்லவனைப் போர்முகத்துக் கழைத்தான்
அன்னுன் !
"நடுகடவூர் படைமோதும் ஊராம்"
என்றுன் !
சொல்லவொணுப் பெருமைகளைச்
சரித்தி ரத்திற்
சூட்டியவன் மறவர்குலம் பெற்ற வேந்தன்,
கொல்லவரும் புலிகளுடைப் பல்லெ டுத்துக்
கொண்டுவரப் படைசேர்த்தான் ;
வேல்வ டித்தான் !

(சென்ற இதழ்களின் தொடர்ச்சி)

சென்றதொரு போர்முனையில் தோய்த்து
வந்த
செங்குருதி வேல்மீது காய்ந்து காண,
அன்றதனைத் துடைத்தார்கள் பாண்டி
நாடர் !
அகமலரப் போர்நாளைக் கணக்கெ டுத்தார் !
"தென்றலுக்குப் புயல் வலிமை
இல்லை யேனும்
சிறிவரும் போததுவும் வந்து சேரும் !
இன்றதனைக் காணட்டும் வஞ்சி வேந்தன் !"
என்றுர்கள் ; தோள்தூக்கி நின்ரு ரம்மா !

"காடெடுத்த பூங்குழலி ! போர்மு கத்துக்
களையெடுக்கப் போகின்றேன் இளைய பிள்ளை
ஏடெடுத்துப் பள்ளிக்குச் சென்ருன் வந்தால்
எழிலாக்கி மடிமீது வைத்துக் கொஞ்சு !
வீடடுத்து நான்வந்தால் மீண்டும் வாழ்வு !
வெங்களத்தில் சாய்ந்திட்டாற் புகழ்ந்து பாடு !
நாடெடுத்த போருக்கு உனது நாதன்
நலமெடுத்துப் போகின்ருன் ! வாழ்த்து
என்றும் !

... ஆரியனும் வேதநாதன் ...

"முத்தத்தால் என் உயிரைக் கட்டிப் போட்டு
முல்லையுலாஞ் சிரிப்பாலே மயக்கந் தந்து
சித்தத்தாற் சிறையாக்கி வைத்த கண்ணே !
சேரகுலப் பூண்டழிக்கப் போகின் றேன் யான் !
ரத்தத்தாற் பழிதீர்ப்பேன் ! இல்லை யென்றல்
ரணகளத்தில் வான்நோக்கிச் சாய்ந்தி
ருப்பேன் !
செத்தத்தாற் கலங்காதே ! மூத்த பிள்ளை
செல்வத்தைப் போருக்கு அனுப்பு !" என்றும்,

பாண்டியனுர் நன்ளுட்டுக் காளை யெல்லாம்
பத்தினிமார் கைதொட்டு, விடைகொடுக்க
வேண்டியதோர் திருக்காட்சி வீடு தோறும்
விளங்கியதைக் காண்பார்தம் நெஞ்சம்
வேகும் !
திண்டியவன் சேரத்தான், திட்டம் போட்டு
தேர்ப்படையும் காற்படையுய சேர்த்து வந்து
பாண்டியநாட் டெல்லைநடுக் கடவூர் தன்னில்
பகையுணர்ச்சி அலைமோதத் துடித்து
நின்ருன் !

கோபுரத்துக் கலசம்போல் எழில்து லங்கக்
கொஞ்சிவரும் தேவியிடம் பாண்டி நாடன்
போர்புரியப் போகுமுனம் ஓடி வந்தான் !
பூங்கொடியாள் புன்னகையால் "வருக !"
என்ருன் !
நூபுரத்து ஒலிவாழ்த்த நுதலும் வாழ்த்த
நூலிடையும் தான் வாழ்த்த,
மதுரை யென்னும்,
மாபுரத்தைக் காப்பானைத் தேவி வாழ்த்தி
வாள்தந்தாள் ! வண்ணமுகம் பார்த்து
நின்ருன் !

களம்நோக்கிப் போகின்றுன் கணவன் என்றல்
கனித்தமிழர் குலக்கோதை கலங்க மாட்டாள் !
உளம்நோக்கி நிற்பானுக் குவகை யோடு
உறுதிதரும் மொழிகூறி அனுப்பி வைப்பாள் !
வளநாடன் தேவியதைச் செய்தாள் ! ஏனும்
வண்ணமுகம் பார்த்தவுடன் வருந்த லானுள் !
குளமாகும் கண்கள் ! அதைக் கண்ட வேந்தன்
கொடித்தோகை நாச்சியினை மார்ப ணைத்து,

"வருந்தாதே கண்ணே! உன் வருத்தத் தாலே
மனந்தளரச் செய்யாதே ! போரில் நானும்
இறந்தாலும் உன்வயிற்றில் எனது செல்வம்
இருக்கின்ருன் ! எதிர்நாளில் உன்னைக்
காப்பான் !
அறந்தானும் வளரவழி செய்வான் ! வையை
அகிலத்தை அவன்காப்பான் ! என்னை நாடு
மறந்தாலும் அவன் செய்கை நிலைநி றுத்தும் !
மைவிழியோய் ! கலங்காதே !
விடைகொ டுப்பாய் !"

என்ருன் ! "அத் தா"னென்ருன் தோகை
நாச்சி,
எழில்மார்பை முக்காடாய்ப் போட்டுக்
கொண்டாள் !
நின்றுளின் கழுத்தூடு கைகள் சேர்த்து
நெடுநேரம் தென்னுடன் தனைம றந்தான் !
திண்டோளின் வலிவெல்லாம் பாதுவென்னும்
திக்காட்டில் வேகாமற் காக்க எண்ணி,
நன்ருய பொருள்கூறும் அமைச்சன், பின்னல்
நடுங்கிய வா(று) 'அரசே' என் றழைத்து
விட்டான் !

சிறகெடுத்த கோழிவயிற் றிருந்த குஞ்சு
திசைதப்பி ஓடுதல்போல் ; மார்பை விட்டு
நறவெடுத்த அதரத்தான் பிரிந்து போனுன் ;
நானிலத்தின் நாதை உடன் நினைவு பெற்ருன் !
மறவர்குலம் வாழத்தான் வாளெ டுத்தான் ;
வளர்படையின் முன்சென்ருன் ; மேலி ருந்து
பறக்கவொணுப் புருப்போல மாது அந்தப்
படைபோகும் காட்சியினைக் கண்டி நைந்தாள் !

(தொடரும்)

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 ‖ 14—7—56 ‖ இதழ் 4

வறுமை கொடிது!

"வறுமையால் ஒழுக்கம் உருக்குலைக்கப்படுகிறது; சமூதாயம் பலி பீடத்திற்கு அழைக்கப்படுகிறது."

—மாக்சிம் கார்க்கி

"வறுமை பாவங்களில் பொல்லாதது. வறுமையில் வாழ்வதே கொடிய பாவ வாழ்க்கை. அந்தப் பாவத்தைப் போக்குவதையே முதற் கடமையாகக் கொள்ளவேண்டும்."

—பெர்னாட்ஷா

"வறுமை மனிதர்களை ஒழுக்கங் கெட்டவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் செய்துவருகிறது."

—பிளாட்டோ

வறுமையைப்போல் துன்பப்படுவது எது? ஒருவனுக்கு எப்பொருளும் இல்லாதபடி துன்பப்படுத்துவதும் அவ்வறுமையேதான்.

—குறள் கருத்து

வறுமையின் கொடுமைகளைப் பற்றி காலஞ்சென்ற மூதறிஞர்கள் கூறிப்போன எண்ணங்களை உலக மன்றம் இப்போது எண்ணிப்பார்க்க வேண்டிய அத்தியாவசியமான நிலை பிறந்திருக்கிறது. மக்களினம் மீண்டும், மீளமுடியாத முதலைப்பிடியில் சிக்கி மாண்டொழிந்து போகவொட்டாமல் தடுத்துத்தானாக வேண்டும் என்கிற பயங்கரக் கட்டத்தில் உலகம் ஊசி முனையில் இன்று நிற்கிறது என்று தெளிந்த அரசியல்வாதிகள் கருதிடத் துணிந்திருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை, உலகப் பொருளாதார நிலையை ஆய்ந்து தங்களது விளக்கத்தை 200 பக்கங்களுக்கு மேற்கொண்ட அறிக்கையொன்றை அண்மையில் வெளியிட்டிருக்கிறார்கள். உலகப்போரின் அந்திய காலத்திற்குப் பிறகு உலகத்தின் செல்வநிலை எப்படி எப்படியெல்லாம் மாறி மாறி உருவெடுத்து இன்று இந்தச் சூன்ய நிலைக்கு வந்திருக்கிறது என்பதை அந்த அறிக்கை மறைமுகமாகத் தெரிவித்திருக்கிறது.

சுயதேவையைப் பூர்த்திசெய்து கொள்ளமுடியாத தனிப்பட்ட மனிதன், என்னென்ன தீய வழிகளில் இறங்கி, நீதியை அலைக்கழித்து. நேர்மையை ஒதுக்கித் தள்ளிவிடுகிறான் என்பதை நினைத்துப் பார்க்கும்போது, மக்கள் சமுதாயத்தின் பெரும்பகுதியினர் வறுமைக் கொடுமையில் சிக்கினால் இந்த மண் என்னாகுமோ, உலகத்தின் போக்கு எப்படி மாறுமோ என்றெல்லாம் அச்சம் பிறக்கிறது.

விலங்கை ஒடித்த வீறுகொண்ட நாடுகள் எவ்வளவுதான் சமுதாய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டாலும், குப்புறக் கவிழ்ந்துகிடக்கும் அடிமை மனப்பான்மையைத் தூக்கி நிறுத்தி, 'ஜெகத்தினைப்பார்!' என்று தட்டிக்கொடுத்தாலும், உலகத்தின் இன்னொரு பகுதி 'இன்பம் எனது குறிக்கோள்! இன்னொருவரைப் பற்றி எனக்கு அக்கறையில்லை' என்று சந்நிதானங்களைப்போல் இருந்தால், உலகம் எப்படி ஒரே நீதியோடு இயங்கமுடியும்?

சமத்துவம் மலரவேண்டும்; ஏழை-பணக்காரன் என்ற நிலை ஒழிய வேண்டும் - என்ற நல்லுபதேசம் ஒரு பகுதியிலே!

உலகத்தை விலைக்கு வாங்க முடியும் என்னால்! அதற்கான முதலீடு என்னிடமுண்டு - என்ற முதலாளித்துவ முரட்டுப் பேச்சு மற்றொரு பகுதியில்!

ஒருபக்கம் தரிசுநிலம் - மற்றொரு பக்கத்தில் பணத்தோட்டம்!

ஆர்த்தெழுந்து அடிமைத்தனம் அகற்றிய நாடுகள் விதவைக் கோலம் பூண்டிருக்கின்றன. ஐரோப்பாவும், அமெரிக்காவும் புது மணப்பெண் கோலத்தில் பூச்சூடி மகிழ்ந்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஐ. நா. சபை பொருளாதார விளக்க அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. "உலகத்தின் பெரும் பகுதியைப் பயங்கரமான வறுமை பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது." இது அறிக்கை தரும் சாராம்சம்.

உலகத்தையே பாதிக்கக்கூடிய ஒரு ஆபத்தை ஐ. நா. சபை முன் கூட்டித் தெரிவித்திருக்கிறது என்றாலும் அபாய அறிவிப்புக் கொடுப்பதுடன் அதனுடைய பணிதீர்ந்துவிட்டதாக அர்த்தமில்லை. 1920 ல் சர்வதேச சங்கமென்ற பெயரில் வில்சனால் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஐ. நா. ஏதும் உருப்படியான காரியத்தைச் செய்ததே இல்லை என்ற பழிச்சொல்லை உறுதிப்படுத்திக்கொண்டுவிடாது என்று தான் நல்லோர் நம்புகிறார்கள். உலக நாடுகளின் ஒற்றுமைக்காக ஏற்படுத்தப்பட்ட அந்தத் தோழமைக் கழகம், ஒருவர் மற்றொருவரின் பலவீனத்தைப் புரிந்துகொண்டு, படை திரட்டவும், பாணம் தொடுக்கவும் வழிவகுத்துக் கொடுக்கும் விளம்பரச் சாவடியாகவோ, தகராறை வளர்த்துவிடக்கூடிய ஆண்டிமடமாகவோ மக்கள் மன்றத்தில் இடம் பெற்றுவிடக்கூடாது என்பதை அதிலே அங்கம் வகிக்கும் அறிஞர் பெருமக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

அதுபோலவேதான் காமன்வெல்த்தும். சம்பிரதாயத்திற்காகவோ, ஜனங்களைத் திருப்திப்படுத்துவதற்காகவோ அல்ல காமன்வெல்த்தில் பிரதமர்கள் சந்தித்துப் பேசுவது! தாய்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய பிரதமர்கள் பலர்கூடிக் கூத்தடிப்பதற்காகத்தான் கடல் கடந்து சென்று காமன்வெல்த்தில் முகாமடிக்கிறார்கள் என்றால் அது, மனித இதயம் படைத்த ஒவ்வொருவராலும் கண்டிக்கப்பட வேண்டியதாகும். ஒவ்வொரு மனதிலும் ஒவ்வொரு ரகசியத்தை ஒளித்துவைத்துக்கொண்டு, வஞ்சகச் செயலுக்கு வழி வகுத்துக்கொண்டு, பனி போக்கும் ஆடை பூட்டி, பால் வடியும் முகத்தோடு சந்தித்து என்ன பயன்?

பத்திரிகைகளிலே புகைப்படத்தைப் பார்க்கும்போது அழகாக இருக்கிறது. பிரதமர்கள் வரிசையாக உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களிடையே ஒரு கட்டுக்கோப்பான கொள்கை, திட்டம் உண்டா?

ஐ. நா. சபையும், காமன்வெல்த்தும் இதுவரை எந்தக் காரியத்தைத் தீர்க்கமாக ஆலோசித்து, விவாதித்து, மக்கள் விரும்பிய தீர்ப்பைக் கூறியிருக்கின்றன?

ஆகவே கடந்துபோன தோல்விகளை எண்ணி எண்ணிப் புலம்பாது உலகத்தை எதிர்நோக்கியிருக்கும் வறுமைப் பேயை ஒழித்து உலகின் செல்வநிலையைச் சமப்படுத்த ஐ. நா. சபை முயலவேண்டும்; காமன்வெல்த் கூட்டாளிகள் அதற்குத்துணை புரியவேண்டும். விபரம் தெரிந்தவர்களை மட்டும் புண்படுத்தக்கூடிய வெறும் அரசியல் பிரச்சினை அல்ல இது! வயிற்றிலிருக்கும் சிசுவையும் கொன்றிடக்கூடிய வறுமைப் பிரச்சினை!

கழகம் பிறந்த செப்டம்பர்
திங்களில் மலர்கிறது

இலக்கியத் திங்களிதழ்
ஆசிரியர்:-
கண்ணதாசன்

விலை அணா எட்டு.

★

முதல் இதழுக்குப் பரிசுத் திட்டம்
சிறுகதைப் போட்டி

தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு கதைக்கும் ரூ. 25 பரிசளிக்கப்படும். கதைகள் சரித்திரச் சிறுகதைகளாக இருக்கவேண்டும்.

கதைகள் அனுப்பப்படவேண்டிய முகவரி—
சிறுகதைப் போட்டி நிர்வாகி, 'முல்லை' சென்னை-6.

விபரங்களுக்கு:
முல்லை
2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.

மானும் மயிலும்

நா. பாண்டுரங்கன், எம். ஏ.

மழைத்துளிகள் சரசரவென விழத் தொடங்கியதும் தெருவில் போகும் மக்களிடையே மலரும் பரபரப்பைப்போல் சிறுவர்கள் பரபரப்படைந்தனர்!

நடந்தனர்.

பெருநடை போட்டனர்.

ஓட்டமாக ஓடினர்!

தீப்பிடித்து எரியும் வீட்டைச் சுற்றி ஒரு நொடியில் வந்து குவியும் கூட்டத்தைப்போல் சிறுவர் கூட்டம் ஒரே கூட்டமாகக் கூடியது!

'ஆகா-ஊகு' என்று ஆரவாரம் செய்தனர்.

'சபாஷ் பலே!' என்று கூச்சல்கள் கிளம்பின.

ஆற்றுப்பாலத்தில் புகைவண்டி செல்லும்போது உண்டாகும் கடகட ஒலியைப்போல் சிறுவர்களின் கை தட்டல் ஒலி இடை இடையே கேட்டது! அவ்வளவு மகிழ்ச்சி - அவ்வளவு பாராட்டு!

கூட்டத்தின் உள்ளே அப்படி என்னதான் நடக்கிறது?

புதிதாக ஓடிவரும் சிறுவர்கள் புரிந்துகொள்ள விரும்பினர்.

மலரும் நிலையில் இருக்கும் தாமரை மொட்டின் இதழ்களைத் தள்ளி விலக்கிக்கொண்டு உள்ளே நுழையும் தேன் வண்டைப்போல், கூட்டத்தில் நின்ற சிறுவர்களை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தனர் சிறுவர்கள்!

அது என்ன?...ஒருவன் இன்னொருவனைக் கேட்டான்!

ஆட்டம்-ஆட்டமடா ஆட்டம்!- பதில் உடனே கிடைத்தது.

என்ன ஆட்டம்?

மயில் ஆட்டம்!

இதோ ஆடுவது மயிலா?

ஆம்மாம்! மயில்தான்!!

மயில் என்று எப்படித் தெரிந்தது?

அட சீ! இது தெரியாதா? மயில் ஒரு பறவை! எதிரே ஆடுவதும் ஒரு பறவை! இதனால் தெரியவில்லையா?

உண்மையிலே இது மயில்தானா?

அட பைத்தியமே! இதுகூடவா உனக்குத் தெரியவில்லை? இரண்டு கால்-ஓர் அலகு-விரிக்கும் தோகை- இவ்வளவும் மயிலுக்கு உண்டு. இதோ ஆடுகின்ற பறவைக்கு அவ்வளவும் உண்டு. ஆகையினால் இது மயில் என்று இன்னமுமா தெரியவில்லை?

'ஓகோ-அப்படியா' என்று வாய் பிளந்தான் கேட்டவன்!

இது மட்டுமா? இன்னும் கேளப்பா! இதோ ஆடுகிற மயிலே சொல்லுகிறது, தான் ஒரு மயில் என்று-போதாதா நம்புவதற்கு?

"ஆமாம்! மயில்தான் - அழகு மயில் - ஆடுகிறது மயில் - ஆமாம் மயில்தான் ஆடுவது" - என்று பெருங் கூச்சலிட்டான் ஐயம் தெளிந்த சிறுவன்.

மயில் ஆடிக்கொண்டிருந்தது.

கால்மாறி ஆடியது.

தோகை விரித்தாடியது.

நெருப்பை ஒத்த நிறங்கொண்ட தொங்கும் தாடையுடன் கழுத்தை இங்குமங்கும் அசைத்து ஆடியது.

சீன வெடிக்கட்டுகளைக் கொளுத்திப் போட்டதுபோல் சிறுவர்களின் கைதட்டல் ஒலித்தது. அவ்வளவு பாராட்டு! அவ்வளவு மகிழ்ச்சி!

மயிலை அப்பொழுதுதான் அவர்கள் பார்க்கிறார்கள். மயிலின் ஆட்டத்தை அப்பொழுதுதான் அவர்கள் பார்க்கிறார்கள். இருக்காதா மகிழ்ச்சி!

இன்று ஆட்டம் அவ்வளவுதான் என்று கழுத்தை வளைத்து அலகால் தரையைக் கொத்துவதுபோல் வணங்கி நின்றது மயில்!

ஒரு பைசா-காலணா-அரையணா.. மயிலின் பாதத்தில் சிறு குன்றைப் போல் சிறுவர்கள் வீசியெறிந்த சில்லறை நாணயங்கள் குவிந்தன!

மயில் அவ்வளவு நாணயங்களையும் சுருட்டிக்கொண்டு மறைந்தது!

மறுநாள் இன்னொரு இடத்தில் மயிலின் ஆட்டம் - அதேபோல் சிறுவர்கள் கூட்டம் இறுதியில் மயிலுக்குக் கொண்டாட்டம்!

நாள் ஓடிக்கொண்டிருந்தது.

அந்த மயில் ஆடிக்கொண்டே இருந்தது.

ஒருநாள்-ஓர் இடத்தில் - அந்த ஒய்யார மயில் ஆடிக்கொண்டிருந்தது; ஓகோகோ என்று கூட்டம் கூடிக்கிடந்தது-சிறுவர்கள் கூட்டம் தான்!

புள்ளிமான் குட்டியைத் தோளில் தூக்கிக்கொண்டு எங்கிருந்தோ ஒரு வேடுவச் சிறுவன் அந்தக் கூட்டத்தில் புகுந்தான்!

மயில் ஆடிக்கொண்டிருந்தது!

"நெளியும் வானவில் - துடிக்கும் பட்டுப்பூச்சி...எல்லாம் இந்த மயிலின் ஆட்டத்தில்" என்றெல்லாம் பாராட்டி வியந்துகொண்டிருந்தனர்.

"ஐயய்யே...இது மயிலல்ல-இது மயிலே அல்ல!" என்று கூச்சலிட்டுக் கூறினான் வேடுவச் சிறுவன். அவன் கூச்சலைப் பக்கத்தில் உள்ள ஒருவர் இருவர் தவிர எவரும் பொருட்படுத்தவில்லை.

மயில் ஆடிக்கொண்டிருந்த இடத்துக்கு அருகே நெருங்கிக் கூட்டத்தைப் பார்த்து "இது மயில் அல்ல- மயில் இது அல்ல" என்று கூவிக் கூவிக் கூறினான்.

கூட்டத்தின் கருத்து அவன்மீது திரும்பியது!

மயில் தன் ஆட்டத்தை நிறுத்தியது. கேலியாக 'முட்டாள் இவன்!' என்று வேடுவச்சிறுவனை அலகால் நீட்டிக்காட்டிக் கூறி விட்டுக் குறுநகை புரிந்தது.

கூட்டத்திலிருந்த ஒரு சிறுவன் ஒரு சிறு கல்லையெடுத்து வேடுவச் சிறுவன்மீது வீசினான்.

மயில் பாதுகாப்பான இடத்துக்கு வந்துவிட்டது.

ஒரு கல் பறந்தது......அதைத் தொடர்ந்து இன்னொன்று!...சிறுவன் உடலில் காயம்பட்டது- மண்டை உடைந்தது...கல் பறந்து கொண்டே இருந்தது. அவன் கீழே விழுந்தான். அவன் கண்விழித்துப் பார்க்கும்போது அவன்மேல் மூடியிருந்த கற்குவியலை அவனுடைய புள்ளிமான் குட்டி தன் கால்களால் விலக்கிக் கொண்டிருந்தது-கனிவோடுஅவன் காயத்தைத் தன்னுடைய நாக்கால் தடவிக்கொண்டிருந்தது. நெடுநேரமாகியிருந்தது. கூட்டமெல்லாம் அடியோடு மறைந்து நெடுநேரம் கடந்திருந்தது!

சிறுவன் மானின் கழுத்தைப் பிடித்துக்கொண்டு மெல்ல எழுந்தான்.

"இருக்கட்டும்! நாளைக்கு ஆட்டம் நடக்கும் இடத்தில் கூரான கல்லை அம்புபோல் வீசி அந்தப் போலி மயிலை மூளியாக்குகிறேன் - மோசப் பறவையின் வேஷத்தைக் கலைக்கிறேன்!" என்று கதறினான் வேடுவச்சிறுவன்.

சிறுமான் சிரித்தது.

வேடுவச்சிறுவன் சீறினான்.

மீண்டும் அந்த மான் சிரித்தது- அவன் காதருகே சென்று ஏதோ சொல்லிற்று! அவன் சிரிப்பு மறைந்தது சிந்தனை மலர்ந்தது!

மறுநாள் விட்ட இடத்திலிருந்து முதல்நாள் ஆடிய மயிலின் ஆட்டம் தொடர்ந்தது - முதல் நாளைவிடப் பெருங்கூட்டம் அடர்ந்தது!

திடீரென்று மயில் ஆடிக்கொண்டிருந்த இடத்தில் அதனருகே இன்னொரு பறவையைக் கொண்டு வந்துவிட்டான் வேடுவச்சிறுவன்! வேடுவச் சிறுவன் விடுத்த பறவை தோகை விரித்தது. அந்தத் தோகையிலே பொன் நாணயங்கள் மின்னின - இரத்தினங்கள் பளபளத்தன-வைரங்கள் ஒளிவிட்டன!

வேடுவச்சிறுவன் விடுத்த பறவை கழுத்தை அசைத்தது. வானவில்லே உருகி அதிலிருந்து வழிந்தது!

சிறுவர்கள் புதுப்பறவையின் தோற்றத்தைக் கண்டு வியந்து வினைக்குறியாக நின்றனர். இது என்ன பறவை? கூட்டத்தில் ஒவ்வொரு சிறுவனும் இதையே கேட்டான். அரைநொடிக்குள் உண்மை பரவியது. இதுவரை ஆடியது வான்கோழி! இப்போது வந்து நிற்பது தான் மயில்! இந்த உண்மை ஒவ்வொரு சிறுவனுக்கும் விளக்கமாயிற்று!

வான்கோழியை நோக்கி ஒரு கல் பறந்தது! அவ்வளவுதான், மறுகல் இன்னொருகல்...தொடர்ந்து பல கற்கள்! கலைந்து சென்ற சிறுவர் கூட்டத்தில் ஒவ்வொருவனும் சிரித்துக்கொண்டே சென்றான்;காரணம் ஒவ்வொருவனும் வான்கோழியின் பிய்ந்த இறகைக் கையிலே வைத்திருந்ததுதான்!

இன்னொரு திக்கில் வேடுவச் சிறுவன் பெருமகிழ்ச்சியோடு மானைப் பார்த்து "உண்மை புரிந்தது! வான்கோழியை விரட்டும் வழி-கல்லை எடுப்பதல்ல, கலாப மயிலை விடுப்பதுதான்!" என்று பூரிப்போடு கூறிப் புன்னகை புரிந்தான்! "மானுக்குத்தானே தெரியும் மயிலின் அருமை-அதனால் தான்..." என்று சொல்லிவிட்டுச் சிரித்தது அந்தப் பொல்லாத புள்ளிமான்! தொலைவில்-வேறொரு திக்கில், முட்டையிலிருந்து வெளி வந்த குஞ்சின் தோற்றத்தில் இறக்கைகள் பிய்ந்து - இறகுகளை எல்லாம் பறிகொடுத்த வான்கோழி நொண்டி நொண்டித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தது! அதன் கண்கள் இரு துளிக் கண்ணீரைச் சொரிந்தன! ★

திருப்புத்தூர் தி. மு. க.

15-7-56 மாலை, அண்ணா திடலில் திருப்புத்தூர் தி. மு. க. சார்பில் ப. உ. சண்முகம், கண்ணதாசன், தென்னரசு ஆகியோர் பேசுவர்.

உயர்ந்த லைன் ஆப்டோன் கலர் பிளாக்குகளுக்கு சிறந்த இடம்
குறித்த காலமும் சிறந்த வேலைபாடும்
The PROCESSING House 2/27, MERAN SAHIB St. MOUNT ROAD MADRAS 2

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

ஈழங்கொண்ட இராசாதிராசன்

— கண்ணதாசன் —

ஊராத்துறையிலிருந்து சிங்கள வேந்தனின் படைகள் கப்பல்களில் புறப்பட்டன. புறப்பட்ட அந்தப் படைகள் குறுகிய கடற்பரப்பைக் கடந்து பாண்டிய மண்டலத்தின் எல்லையை மிதிப்பதற்குள் பெருத்த சூருவளியில் சிக்கிக்கொண்டு திசை தப்பின. அதனால் பராக்கிரமன் குறித்த காலத்தில் சிங்களப்படை களின் உதவியைப் பெறமுடிய வில்லை. அந்த நேரம் பார்த்து குலசேகர பாண்டியன் தன் முழு பலம் கொண்டு மதுரையை மோதி னன். நான்கு நாட்கள் நடந்த போரில் மதுரை குலசேகரன் கையில் விழுந்தது. களத்திலேயே பராக்கிரம பாண்டியன் கொல்லப் பட்டான். அப்போது பராக்கிரம னின் மனைவி, மக்கள் மதுரையின் எல்லையிலிருந்த வேனில் மாளிகை யில் பதுங்கியிருந்தார்கள். பராக் கிரமன் தோற்ற செய்தியும் மடிந்த செய்தியும் குலசேகரன் படைகள் மதுரைக்குள் நுழைந்த செய்தியும் பராக்கிரமனின் குடும்பத்தினருக்கு எட்டின. பராக்கிரமனின் பட்டத் தரசி புழுவாய்த் துடித்தாள். தன் மூன்று புதல்வர்களையும் அழைத்துக் கண்ணீர் வடித்தாள். அந்தத் துயரம் அதிக நேரம் நீடிக்கவில்லை. குலசேகரனின் படை வீரர்கள் சிலரும் அந்த வேனில் மாளிகைக் குள் நுழைந்தனர். பட்டத்தரசியும் இரண்டு குழந்தைகளும் கொல்லப் பட்டார்கள். இருபது வயது நிரம் பிய இளவரசன் வீரபாண்டியன் மட்டும் அவர்கள் கண்ணுக்குத் தப்பி வெளியேறி பிரான்மலைப் பகுதியில் ஒண்டினன்; மாசு மறு வற்ற மறவர்குல மக்களை அதிக மாகப் படைத்த பிரான்மலை அவ னுக்குக் கைகொடுத்தது.

குலசேகரன் வெற்றி யெய்திய மறுநாளே சூருவளியில் சிக்கி திசைமாறிய-இலங்காபுரித் தண்ட நாயகன் தலைமையில் வந்த சிங்களப் படைகள் திசை கண்டுபிடித்து தனிக்கோடிக் கரையில் வந்து இறங்கின.

ஈழப்படைகளைக் கண்ட சீரிக் கோடி மக்கள் விடுகளை அடைத்துக் கொண்டு கிடந்தார்கள். பராக்கிரம பாண்டியனிடத்திலே அன்பு செலுத்திய ஒரு தளபதி மாறு வேடத்தில் தனிக்கோடிக் கரையில் ஈழப்படைகளை எதிர்பார்த்தவாறு இருந்தான். பராக்கிரமன் கொல்லப் பட்ட செதியை அவனே தண்ட நாயகனுக்குக் கூறினன். ஆத்திரங் கொண்ட தண்டநாயகன், தனிக் கோடி, இராமேஸ்வரம் உட்பட பரமக்குடி வரையுள்ள பகுதிகளைக் கைப்பற்றினன். பாண்டியநாட்டின் பல பகுதிகளிலும் சிங்களப் படை களும் குலசேகரன் படைகளும் மோதின. இறுதியில் தண்டநாய கன் வெற்றிபெற்றன்.

குலசேகரன் புறங்காட்டிகொங்கு நாட்டுக்கு ஓடினன். கொங்கு நாட்டில் நீலமலைச் சரிவிலிருந்த தன் மாமன் படைகளைத் துணைக் கழைத்துக்கொண்டு மீண்டும் பாண்டி நாட்டுக்கு வந்தான். அங்கே, மதுரையின் சுற்றுப்புறங் களில் சிதறிக்கிடந்த பராக்கிர பாண்டியன் படைகளையும் ஈழ படைகளையும் ஒன்று சேர்த்துக் கொண்டு தண்டநாயகனை மோதி னன். அதிலும் குலசேகரனுக்குத் தோல்வியே கிடைத்தது.

வெற்றிப் பெருமிதத்தோடு மதுரையை வலம்வந்த இலங்கா புரித் தண்டநாயகன் கொல்லப் பட்ட பராக்கிரமனின் புதல்வனை வீரபாண்டியனைத் தேடினன். அக மகிழ்வுற்ற வீரபாண்டியன் பிரான் மலையிலிருந்து மதுரைக்கு வந்து தண்டநாயகனைச் சந்தித்தான். தண்டநாயகன் அவனைப் பாண்டிய மண்டலமன்னனுக முடிசூட்டினன். பாண்டிய மண்டலத்தின் ஒரு பகுதி யான கிழைமங்கலம் மேலமங்கலம் முதலான ஊர்களடங்கிய சிலப்பரப் பை தளபதி கண்டதேவ மழவராய னுக்கு அளித்தான். தொண்டி, கரந்தங்குடி முதலிய ஊர்களடங்கிய பகுதியை மழவச் சக்கரவர்த்திக்கு அளித்தான்.

இப்படி வீரபாண்டியனுக்கும் அரசியல் தலைவர்கள் சிலருக்கும் முடிவுரிமை வழங்கியதின்மூலம் தண்டநாயகனுக்கு மதுரையில் அதிகம் பிடிப்பு ஏற்பட்டது. சிங்களப்பெண்கள் சிலரும் மது ரைக்கு வந்தார்கள். அந்தச் சமயத் தில்குலசேகர பாண்டியன்மூன்றும் முறையாக மதுரையைமோதினன்.

தண்டநாயகனல் ஆட்சியுரிமை வழங்கப்பட்ட கண்டதேவனும், மழவச்சக்கரவர்த்தியும் இப்போது குலசேகரனேடு சேர்ந்துகொண் டார்கள். இந்தப் போரில் வீர பாண்டியனும் தண்டநாயகனும் தோல்வியடைந்தார்கள். வீரபாண் டியன் மதுரையைவிட்டே ஓடினன். ஆனல் தண்டநாயகன் ஈழநாட் டிலிருந்து சகத்விசய தண்டநாயகன் தலைமையில் துணைப்படை யொன் றைப்பெற்று குலசேகரனை மீண்டும் மோதி வென்று, வீரபாண்டியனை அரியாசனத்திலேற்றினர்கள்.

வாழ்க்கையில் நிம்மதியே இல் லாது போர் முகத்திலேயே இருந்து வெற்றி தோல்விகளை மாறி மாறிச் சந்தித்துக் கொண்டிருந்த குல சேகரன், கி. பி. 1167-ல் சோழ நாட்டுக்கு வந்து இரண்டாம் இராசாதி ராசனின் உதவியைக் கோரினன். அவனும் திருச்சிற்றம் பலமுடையான் பெருமா நம்பிப் பல்லவராயர் தலைமையில் ஒரு பெரும்படையைப் பாண்டிய நாட் டுக்கு அனுப்பினன். சோழன் படைக்கும் சிங்களப்படைக்கும் தொண்டியிலும் பாசியிலும் போர் கள் நடந்தன. முதலில் சிங்களப் படைகள் வென்றாலும் பிறகு நடை பெற்ற போர்களில் சோழப்படை கள் வெற்றிபெற்றன.

தண்டநாயகன் தலையையும் சகத் விசயன் தலையையும் கொய்து, மதுரைக் கோட்டைவாசலில் வேலிலே சொருகி வைத்தான் சோழத் தளபதி. குலசேகரனுக்கு ஆட்சியுரிமை அளித்தான்.

சில ஆண்டுகள் கழிந்தன !

சிங்கள மன்னன் பராக்கிரமபாகு மதுரையின்மீதே கண்ணுயிருந் தான். சோழநாட்டையும் பாண்டிய நாட்டையும் ஒரு சேர வெல்ல விரும்பினன். அப்போது, அவ னுடைய சகோதரியின் மகன் சீவல்லபன் சோழநாட்டிலிருந் தான். பராக்கிரம பாகுவின் மகளான குயினியைச் சீவல்லபன் மணமுடிக்க விரும்பி, மாமன் இணங்காத காரணத்தால் பகைமை கொண்டு,சோழநாட்டுக்கு வந்திருந் தான். ஈழநாட்டின் சிங்காதன உரிமை அவனுக்குத் தகராறு இருந்த

இந்த நிலையில் ஈழநாட்டில் பராக் கிரம பாகு பெரும்படையையும், உணவுப் பொருள்களையும் சேகரிக்க ஆரம்பித்தான். ஊராத் துறை, புலச்சேரி, மாதோட்டம், வல்லிகாமம், மட்டிவாழ், முதலிய ஈழநாட்டு ஊர்களில் படைகளைக் குவித்தான். படகுகளும் தயாரித் தான். தானே அவற்றை நேரி லிருந்து பார்வையிட்டான்.

அவன் மகள் குயினி சற்றுக் கருப் புத்தான் என்றாலும் அழகாக விளங்கினள். உருண்டு திரண்ட தேகக்கட்டு, கவர்ச்சிமிக்க இளம் பாவையாக அவளைப் படைத் திருந்தது. பாதந்தொடும் கூந்த லும், நீலக்கருவிழிகளும், காண் போரின் நெஞ்சம் நெகிழும் வகை யிலே அமைந்திருந்தன. சீவல்லப னிடத்திலே அவளுக்கு உயிர். அத்தானை மணந்து வாழவே விரும்பினள் அவள். சிறு வயது முதலே ஒன்ருகப் பழகியதால் அவன் உருவத்தை அவள் இதயம் அச்சடித்து வைத்திருந்தது.

மலைப்பகுதிகளில் அத்தானேடு சுற்றிவருவதும் காதலுரையாடுவது மாக சிலகாலம் வாழ்ந்துமிருந்தாள். சிங்காதனத் தகராறு வந்த பிறகு, சீவல்லபனைப் பார்க்கமுடியாதவாறு குயினியைக் கட்டுப்படுத்திவிட் டான் பராக்கிரம பாகு. குயினி கண் கலங்கினள்.

சீவல்லபன் ஒரு நாளிரவு அரண் மனை அந்தப் புரத்திற்குள் காவலன் போல் நுழைந்து குயினியைச் சந்தித்தான். தான் தமிழகத்திற்குச் செல்வதாகவும் அங்கிருந்து படை பலம் பெற்று ஈழநாடு வந்து குயினியை மணமுடித்துக்கொள்வ தாகவும் கூறிவிட்டு இரவோடு இரவாகப் படகிலேறி சோழ மண்டலக் கரையோரம் வந்திறங் கினன் சீவல்லபன். அன்றுமுதல் அங்கேயே இருந்துவந்தான். நான்கு மாதங்களுக்குப் பிறகுதான் ஊராத்துறைப் பகுதிகளில் பராக் கிரமபாகு படை சேர்க்க ஆரம் பித்தான். சோழபாண்டியர்களை எதிர்க்கத்தான் பராக்கிரம பாகு படை சேர்த்தான் என்றாலும் அதை அறியாத குயினி தன் அத்தானுக்கு ஏதும் கேடு விளையுமோ என்று அஞ்சினள். மெதுவாகத் தந்தை யிடம் அதுபற்றியும் விசாரித்தாள். கடியகுரலில் அவளை அடக்கினன் பராக்கிரம பாகு.

இதற்குள் ஈழநாட்டின் செய்தி யறிந்த சோழநாட்டின் அமைச்சர் தலைவன் அம்மையப்பன் பல்லவ ராயன் சீவல்லபனேடு ஒரு பெரும் படையைச் சேர்த்துக்கொண்டு ஈழ நாடு நோக்கிப் புறப்பட்டான்.

கொங்தளிக்கும் கடலைக்கடந்து அவர்கள் வந்த படகுகள் ஊராத் துறைக்கு ஒருகல் தூரத்தில் நின் றன. படகிலிருந்தபடியே தன் தாயகத்தின் கரையைப் பார்த்தான் சீவல்லபன். தென்னைக்கூட்டம் மண்டிக்கிடந்த அந்த இடம் அவனது இதயத்தில் பல்வேறு உணர்ச்சிகளைத் தூண்டிற்று.குயினி யோடு ஆடிய அந்தக் காலங்கள் அவன் கண்முன்னல் வரிசை போட்டு நின்றன. அவன் மெய் சிலிர்த்தது. அருகில் வந்து அம்மை யப்பனைத் திரும்பிப் பார்த்தான், புன்னகையோடு. நீண்ட நாட் களுக்குப் பிறகு தாயகத்தைக் காணுவது எவ்வளவு மகிழ்ச்சிக் குரியது என்பதை நன்ருக அறிந் தவன் அம்மையப்பன். கடாரம் சென்று இரண்டுஆண்டுகள் தங்கி, மிகுந்த அல்லலுக்குப் பிறகு சோழ நாட்டுக்குத் திரும்பி வந்தபோது தஞ்சையின் தெருக்களும், மாட கூடங்களும் தனக்கு எவ்வளவு புதுமையாகத் தட்டுப்பட்டன என் பதை அவன் அப்போது எண்ணிப் பார்த்தான். சீவல்லபனின் தோளிலே தட்டினன்.

— 10-ம் பக்கம் —

அருணேதயம் தொகை நூல் வரிசை!
முதல் நூல்
தமிழ் தந்த இன்பம்
பேராசிரியர்கள் எழுதுகிருர்கள்
விலை ரூ. ஒன்று
நாடெங்கும் விற்பனையாளர்கள் தேவை !
அருணேதயம் - சென்னை 14.

முன் கதை

1945-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள். சிறையிலிருந்து விடுதலை அடைந்த தியாகி தேசானந்தர் அன்று வண்ணையம்பதியில் சொற்பொழிவாற்றினர். மக்கள் ஏக ஆரவாரம் செய்தனர்.

கூட்டம் முடிந்தது. அன்றைக்கே தேசானந்தர் தம் சொந்த ஊரான மேலூருக்குப் புறப்பட்டார். அவர் ஏறிய ரயிலிலேயே, அவரைத் தொடர்ந்து ஒரு பெண், அவசர அவசரமாக ஏறிக்கொண்டாள். போர்ட்டர் அவளது பெட்டியைக் கொண்டு வந்து ரயில் பெட்டியில் வைத்துவிட்டுச் சென்றான். அந்தப் பெண்ணின் முகம் வெளிறி இருந்தது. அவள் உடம்பிலே இரத்தமே இல்லை. உட்காருவதற்கு இடமின்றித் தவித்தாள். தேசானந்தர் கொஞ்சம் விலகி உட்கார்ந்துகொண்டு அந்தப் பெண்ணுக்குச் சிறிது இடம்தந்தார்.

தேசானந்தர் அந்தப் பெண்ணுடன் உரையாட ஆரம்பித்தார். அந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்களை அவளிடமிருந்தே கிரகித்துக்கொண்டார். பின் அவர் தூங்கிவிட்டார். திருச்சியில் விழித்துப் பார்த்தபோது அந்தப் பெண்ணை வண்டியில் காணோம். அவளது பெட்டி மட்டும் இருந்தது. பெட்டியுடன் தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் அவர். அந்தப் பெட்டியைக் கண்ட அவரது மனைவி கோமளம் "அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது?" என்று வினவினாள். தேசானந்தர் அந்தப் பெட்டியையும்—பெட்டி கொண்டு வந்த பெண்மணியையும்—அவள் அதனை ரயில்பெட்டியில் வைத்துச் சென்றுவிட்ட வரலாற்றையும் சொல்லி முடித்தார். அத்துடன் அந்தப் பெண்ணின் கணவனது முகவரி தனக்குத் தெரியும் என்றும் அதை அவனிடம் திருப்பச் சேர்த்துவிடலாம் என்றும் சொன்னார். கணவனது பதிலை எதிர்பாராமலேயே பெட்டியைத் திறந்த கோமளம், 'ஆ' என்று அலறினாள். என்ன ஆச்சர்யம்? பெட்டிக்குள் ஒரு குழந்தை கிடந்தது. தேசானந்தர் திகைத்துவிட்டார். அதனருகில் கிடந்த கடிதத்தைப் பிரித்தார்; படித்தார்.

ரயிலில் அவர் சந்தித்த பெண்தான் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தாள். தேசபக்தர் சூடாமணியை நம்பித் தன் வாழ்வை வீணாக்கிக் கொண்ட வேதனைமிகுந்த வரலாற்றை அவள் கடிதத்தில் வரைந்திருந்தாள்.

இரண்டு தினங்களில் தேசானந்தர் சென்னைக்குப் புறப்பட்டார். ரயிலில் வரும்போது எதிர்பாராதவிதமாக சூடாமணியை ஒரு நாடகக்காரப் பெண்ணுடன் சந்தித்தார். திருச்சியில் சூடாமணியும் அந்தப் பெண்ணும் இறங்கியதைப் பார்த்து அவரும் இறங்கிவிட்டார்.

தேசானந்தர் தங்கச்சென்ற ஓட்டலிலேயே சூடாமணியும் நாடகக்காரப் பெண்ணும் தங்கியிருந்தனர். அவனிடம் சீதாவைப் பற்றித் தேசானந்தர் பேசவே, அவனும் சீதாவை ஏற்றுக்கொள்வதாகச் சொன்னான். அந்த நேரத்திலே எதிர்பாராமல் சீதா அலங்காரத்தோடு ஒரு மைனருடன் வந்துகொண்டிருந்தாள்.

5

தேசானந்தர் விழி பிதுங்கிவிடுவதுபோல அவர்களைப் பார்த்தார். ஆம், அவளேதான் என்று உறுதிப்படுத்திக் கொண்டார். தன்னையும் அறியாமல் 'சீதா' என்று கூப்பிட்டுவிட்டார். திடுக்கிட்ட சூடாமணி அறையை விட்டு வெளியில் வந்தான். அந்தப் பெண் திகைத்தபடி திரும்பிப் பார்த்தாள்.

"உன் பெயர் சீதாதானே" என்று கேட்டார் தேசானந்தர்.

"யார் சொன்னது?" என்று பதில் கேள்வி கேட்டாள் அந்தப் பெண்.

கூட வந்த மைனர் குழப்பத்தோடு நின்றான். சூடாமணி தேசானந்தரின் கையைப் பிடித்துக் கொண்டு "இது சீதாவல்ல' இப்படி வாருங்கள்!" என்றான்.

அந்தப் பெண் சூடாமணியைப் பார்த்துக் கொஞ்சங்கூட அதிர்ச்சியடையவில்லை. அதனால் தேசானந்தருக்கும் திடீரென்று சந்தேகம் பிறந்தது.

"சீதாவாக இருந்தால் சூடாமணியைப் பார்த்ததும் அலறி இருக்க வேண்டுமே! அப்படியென்றால் இந்தப் பெண் யார்? ரயிலில் பார்த்த பெண் போலவே இருக்கிறாளே!"—அவரது கண்களிலே அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. ரயிலில் பார்த்தவள்தான் இவள் என்று மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டார். அதற்குள் அந்தப் பெண்ணும் மைனரும் தங்களுடைய அறைக் கதவைத் திறந்தார்கள். பின்னாலேயே போன தேசானந்தர் "உன் பெயர் என்னம்மா?" என்று கேட்டார். கூட வந்தவருக்குக் கோபம் கோபமாக வந்தது. அந்தப் பெண் சிறிதுகூடச் சலனமில்லாமல் 'மனோன் மணி' என்றாள். அவளுக்கும் அவரை எங்கேயோ பார்த்ததுபோலிருந்தது. மனோன்மணி என்றதும் தேசானந்தர் ஒரு முறை துள்ளி நின்றார்.

'மீண்டுமா பொய் சொல்லுகிறாய்?" என்று இடி முழக்கம் போல் கேட்டார்.

சூடாமணியிடம் திரும்பினார். "ஏய் சூடாமணி! இவள்தான் சீதா! என்னை நீங்கள் ஏமாற்ற முடியாது. ஏற்றுக்கொள் இவளை" என்றார்.

கூட வந்த மைனருக்குக் குழப்பத்தால் தலை சுற்றிற்று. என்னமோ ஏதோ என்று அவன் திகைத்தான்.

மெல்லிய குரலில் தேசானந்தரைப் பார்த்து "உள்ளே வாருங்கள் பேசலாம்" என்றான். அவர் சூடாமணியைக் கையோடு பிடித்துக்கொண்டு அந்த அறைக்குள் நுழைந்தார். சூடாமணியின் கூட வந்திருந்த நாடகக்காரி குழப்பத்தோடு தன் அறையில் உட்கார்ந்திருந்தாள்.

அறைக்குள் சென்ற தேசானந்தர் அமைதியோடு எல்லாரையும் விசாரித்தார். அந்தப் பெண்ணிடம் தான் அவளை ரயிலிலே சந்தித்ததை நினைவுபடுத்தினார். அப்போதுதான் அவளுக்கு விஷயம் புரிந்தது. அவள் நடந்தகதையைச் சொல்ல ஆரம்பித்தாள். அவள் பெயர் உண்மையிலேயே மனோன்மணிதானாம். தாய் மாமனையே மணந்துகொண்டாளாம். அவன் பெயர்தான் அருணாசலமாம். அவன் அவளைக் கவனிக்காமல் விரட்டிவிட்டானாம். ஒரு நாள் கூட அவனோடு சேர்ந்து வாழ்ந்ததில்லையாம் அவள். அவள்கூட வந்த வாலிபன் தான் அவளை அதிகமாகக் காதலித்தானாம். அவனையே அவள் பதிவுத் திருமணம் செய்துகொள்ள விரும்பினாளாம். சென்னையில் நாலு பேருக்குத் தெரிந்துவிடும் என்பதற்காகத் திருச்சியில் பதிவுத் திருமணத்தை முடித்துக் கொள்ள விரும்பினார்களாம். முதல் நாளே அவன் சென்னையிலிருந்து புறப்பட்டுத் திருச்சிக்கு வந்து விட்டானாம். மறு நாள் அவள் வீட்டிலிருந்து ஒரு பெரிய பெட்டி நிறையச் சாமான்களை எடுத்துக்கொண்டு மின்சார ரயிலில் எழும்பூருக்கு வந்தாளாம். திருச்சி ரயில் புறப்படுவதற்குச் சில நிமிடங்களே இருந்தபடியால் அவசரமாக ஒரு போர்ட்டரைக் கூப்பிட்டுப் பெட்டியைத் தூக்கிவா என்று கூறிவிட்டு, ரயிலில் வந்து ஏறிக்கொண்டாளாம். அவனும் ஒரு பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்து வைத்தானாம். தன் பெட்டிதான் அது என்று நினைத்துக்கொண்டு அவளும் அதற்குக் கூலியைக் கொடுத்து அனுப்பிவிட்டாளாம்!

விழுப்புரத்தைத் தாண்டி ரயில் வந்துகொண்டிருந்தபோது துண்டு எடுப்பதற்காகப் பெட்டியைத் திறந்தாளாம். பூட்டாமலிருந்த அந்தப் பெட்டி சுலபத்தில் திறந்துகொண்டதாம். பெட்டிக்குள் பார்த்தபோது செத்துப்போன குழந்தையொன்று கிடந்ததாம். திடுக்கிட்ட அவள், அப்போதுதான் அது தன் பெட்டியல்ல என்பதை உணர்ந்தாளாம். பெட்டியை மூடி

வைத்துவிட்டுத் திருச்சிக்கு முதல் ஸ்டேஷனிலேயே இறங்கிவிட்டாளாம்.

இதைக் கேட்டதும்தான் தேசானந்தருக்கு விஷயம் புரிந்தது. "அப்படியானல் சீதா எங்கே?" என்று கேட்டார்.

"யாருக்குத் தெரியும்" என்று சாதாரணமாகப் பதில் சொன்னுள் அந்தப் பெண். அவளைப் பதிவுத் திருமணம் செய்துகொண்ட வாலிபனுக்கு அப்போதுதான் உயிர் வந்தது.

தனது துப்பு இறுதிக்கட்டத்தில் தோல்வியடைந்ததற்காகத் தேசானந்தர் தன்னைத்தானே நொந்துகொண்டார். அந்த இருவரையும் பார்த்து 'நீங்கள் வாழ்க' என வாழ்த்தினர்.

"கணவனல் கைவிடப்பட்ட இவளைத் துணிந்து பதிவுத்திருமணம் செய்துகொண்டாயே நீதான் சிறந்த தியாகி" என்று நற்சாட்சிப்பத்திரமும் வழங்கினர். "நீங்கள் இருவரும் ஆனந்தமாக இருங்கள்" என்று கூறிவிட்டுச் சூடாமணியை அழைத்துக்கொண்டு வெளியில் வந்து, அவர்கள் ஆனந்தமாக இருப்பதற்கு முதற்படியாகக் கதவையும் சாத்தி வைத்தார்! இப்போது தேசானந்தருடைய மூளை சீதா எப்படி இருப்பாள் என்ற கற்பனையில் இறங்கிற்று. தன் அறையில் வந்து உட்கார்ந்து அந்த நாடகக்காரியை அழைத்து வரும்படி சூடாமணிக்கு ஆணையிட்டார். சூடாமணி உடனே போய் அழைத்து வந்தான்.

தேசானந்தர் அவள் முன்னல் ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டி "இந்தா இதை எடுத்துக்கொண்டு திரும்பிப் பாராமல் நட. வீட்டுக்குப் போய் யாராவது ஒருவனைக் கட்டிக்கொண்டு மரியாதையாகக் குடும்பம் நடத்து. உன்னைப் போன்ற இளம் பெண்களெல்லாம் இப்படிச் சீர்கெட்ட வேலையில் இறங்கிவிட்டால் நாடு எப்படி விடுதலை பெறும்" என்றுர் தேசானந்தர்.

நாட்டிலே நடக்கின்ற பிரதி ஒரு காரியத்திற்கும் நாட்டு விடுதலைக்கும் தொடர்பு உண்டு என்று திவிரமாக நம்பினர் அவர். ஒவ்வொரு மனிதனும் விதி வகுத்து வைத்துக்கொண்டு வாழவேண்டும் என்று ஆசைப்பட்டார் அவர். அவர் காங்கிரஸ்காரராக இருந்தும்கூட ஒழுக்கத்திலே அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

அந்தப் பெண் கோபமாக அவர் முகத்தைப் பார்த்தாள். தேசானந்தர் தானும் கோபமாகப் பார்த்து உறுமினர். சற்றுப் பயந்த அந்தப் பெண் அவர் கொடுத்த பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு சூடாமணியின் முகத்தைப் பார்த்தாள். சூடாமணி இப்போது தேசானந்தர் வசமாகி இருந்தான். தன் குடுமி அவர் கையிலிருப்பதாகப் பயந்துகொண்டிருந்தான். அதனல் அந்தப் பெண்ணிடம் அவன் ஒன்றும் பேசவில்லை.

'நட' என்றுர் தேசானந்தர். அந்தப் பெண் நடந்தாள். பிறகு அவர் சூடாமணியைத் தன் அருகில் உட்கார வைத்துக்கொண்டு போதனை செய்ய ஆரம்பித்தார்.

"உலகத்தை உனக்குத் தெரியாது தம்பீ. எனக்கொன்றும் வயது அதிகமாகிவிடவில்லை. என்றுலும் உலகத்தை நான் நன்குக அறிவேன். மனிதனின் கீழ்த்தர ஆசையிலே வாழ்க்கை கெடுகிறது. அந்தக் கெட்ட வாழ்க்கையிலே உலகம் கெடுகிறது. எவ்வளவோ பேரை நான் பார்த்திருக்கிறேன். பருவ கால உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் சின்ன வயதிலேயே கண்ட கண்ட இடங்களுக்குப் போய் சீக்குச் சிரங்கு பிடித்து ஆஸ்பத்திரியில் அலறிய வாலிபர்களை நான் கண்டிருக்கிறேன். கொஞ்சம் வயதான காலத்தில் தங்களது சின்ன வயதுத் தவறுக்காக அவர்கள் வருந்தியிருக்கிருர்கள். ஒழுக்கம் ஒரு மனிதனுக்கு எவ்வளவு அவசியம் தெரிமா? காந்திஜியும் மனிதர்தான்; மற்றவர்களும் மனிதர்கள்தான். ஆனல் காந்திஜிக்கு இருக்கிற மரியாதை மற்றவர்களுக்கு ஏன் இல்லை? காரணம், காந்திஜி ஒழுக்கத்தை உயிராகக் கருதுகிருர். இதனல், காந்திஜியைத் தவிர மற்றவர்கள் எல்லோருமே ஒழுக்கம் கெட்டவர்கள் என்று நான் சொல்ல வரவில்லை. காந்திஜி ஒவ்வொரு முறையிலும் ஒழுக்கத்தைப் பின்பற்றுகிருர். நீ ஏன் ஒழுக்கமாக இருக்கக்கூடாது? வரையறுத்த வாழ்க்கை நடத்துவது மனதுக்குச் சங்கடமாக இருக்குமென்று கருதுகிருயா? மனம்போன போக்கெல்லாம் போவதுதான் மகிழ்ச்சி யென்று கருதுகிருயா? மனதுக்கு ஒரு கட்டுப்பாடு இருந்தால் வாழ்க்கை எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் தெரியுமா? மனம்போலத்தான் வாழ்வு என்பதை நீ கேட்டதில்லையா? மனம் அங்கேயிங்கே அலைமோதினல் வாழ்க்கையும் அலைமோதிப் போகும். மனம் நேராகச் சென்றுல் வாழ்க்கையும் நேராகச் செல்லும். தம்பி, ஒரு சேதி சொல்லுகிறேன் கேள்; சிறையிலே ஏராளமான கைதிகள் இருக்கிருர்கள். அடடே, ஒன்றை மறந்துவிட்டேனே நீ கூடச் சிறைக்குப் போயிருக்கிருயாமே! இருந்துமா உனக்குத் தெரியவில்லை? சிறையிலே எவ்வளவு கைதிகளிருக்கிருர்கள்! எல்லோரையும் நீ விசாரித்திருக்கிருயா? அவர்களிலே சில கைதிகள் இருபது முறைக்குமேல் சிறைக்கு வந்திருக்கிருர்களே, ஏன்? ஒரு முறை அவர்கள் தவறு செய்தார்கள்; சிறைக்கு வந்தார்கள். அந்தத் தவறுக்கு மனம் பழக்கப்பட்டுவிட்டது. திரும்பத் திரும்பச் சிறைக்கு வந்தார்கள்.' முதல் தடவை சிறைக்கு வரும்போது அவர்களுக்குச் சங்கடமாகத்தானிருந்தது. இரண்டாவது முறை வந்தபோது சங்கடம் அதிகமாக இல்லை. மூன்றுவது முறை வந்தபோது அது சாதாரணமாகத் தெரிந்தது. நான்காவது, மணப்பந்தலுக்கு மாப்பிள்ளை வருவது போல் வர ஆரம்பித்தார்கள். கொடிய குற்றங்கள் அவர்களுக்கு வாழ்க்கையின் நியதிகளாகவே தோன்ற ஆரம்பித்தன. குற்றமே வாழ்க்கையாகி விட்டது. ஒழுக்கம் நாணயம் என்பதெல்லாம் பிழைக்கத் தெரியாதவர்களின் வெறும் பேச்சாகத் தோன்றிவிட்டது அவர்களுக்கு. நீர் அளவே யாகுமாம் நீராம்பல், வெள்ளத்தனைய மலர் நீட்டம், மண்ணுறத்த நீர்,—இதெல்லாம் மனதுக்குச் சொன்ன உவமைகள்தான்.

ஒரு மனிதனுக்குக் குற்றங்கள் சாதாரணமாகத் தோன்ற ஆரம்பித்துவிட்டால், அவன் அதோடு தொலைந்தான் என்று பொருள். தம்பீ, ஒரு நாளாவது எந்தவிதக் குற்றமும் புரியாமல் பொய்யே சொல்லாமல் மனதில் தவருன எண்ணங்களே வராமல் திட்டமாக வாழ்ந்துபார். அன்றைக்கு உன் மனது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறதென்று பார். காலா காலத்தில் கடமையை ஒழுங்காகச் செய்துகொண்டு யோக்கியனுக வாழ்வதிலே இருக்கிற இன்பம் வேறு எதிலுமே கிடையாது. ஆரம்பத்திலேயே கோணிவிட்டதால் வயதான காலத்தில் தங்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டுக்கொள்ள முடியாமல் பல பேர் தடுமாறுகிருர்கள். உனக்குச் சின்ன வயது. இப்போதே திருத்திக் கொண்டால் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். நான் சொல்வதெல்லாம் உனக்குத் தலைவலியாகத் தானிருக்கும். வாழ்க்கை பூராவிலும் உடம்பு முழுக்க வலிப்பதைச் சகித்துக் கொள்வதை விட இரண்டொரு நாள் தலைவலியோடு போவது நல்லது.

"ஒரு பெண்ணைக் கண்டாய் உடம்பு திமிரெடுத்தது. தேவையான மட்டும் அவளோடு இருந்தாய்; வாழ்ந்தாய்; இப்போது வேறு பெண்ணைத் தேடுகிருய். பெண் என்றுல் என்ன? பறச்சி போகம் வேருே? பார்ப்பனத்தி போகம் வேருே?—என்று நம்முடை ஞானிகள் பாடிவைத்திருக்கிருர்கள். இதற்கு என்ன பொருள்? எல்லாப் பெண்ணும் ஒருமாதிரிதான். கொஞ்சம் பச்சையாகவே கேட்கிறேன்; உடலின்பம் அனுபவிக்கும்போது ஒரு பெண்ணுக்கும் மறு பெண்ணுக்கும் ஏதாவது பேதம் தெரிகிறதா உனக்கு? ஒரு கதை கேட்டிருப்பாய்; தன் மனைவியை விட்டுவிட்டு மந்திரியின் மனைவியை நாடினனும் ஒரு மன்னன். மந்திரி இல்லாத சமயத்தில் அவள் வீட்டுக்கே போனனும். அவளிடம் தன் ஆசையை வெளியிட்டானும். உடனே அந்தப் பெண், ஊதா, கருப்பு, மஞ்சள், பச்சை ஆகிய நாலு வர்ணப் பாத்திரங்களில் ஒரே மதுவை ஊற்றி முதலில் ஊதாப் பாத்திரத்து மதுவைக் கொடுத்தாளாம். மன்னன் குடித்தானும். பிறகு பச்சைப் பாத்திரத்து மதுவைக் கொடுத்தாளாம், மன்னன் குடித்தானும். அதுபோல்வே கருப்பு, மஞ்சள் பாத்திரங்களிலிருந்த மதுவையும் கொடுத்துக் குடிக்கச் செய்தாளாம். 'ஒன்றுக்கொன்று எப்படி இருக்கிறது?" என்று கேட்டாளாம். "எல்லாம் ஒரே மாதிரிதான் இருக்கிறது" என்றுனும் மன்னன். "அப்படித்தானடா பெண்களும். நிறம் தவிர உடல் ஒன்றுதான்; சுகம் ஒன்னுதான். போ உன் மனைவியிடம்!" என்று புத்தி சொல்லி அனுப்பி வைத்தாளாம். தம்பி, நீயும் அதைத் தெரிந்துகொள்ள வேண்டும். சரி நேரமாகிறது. நான் மேலூருக்கே போய்விடலாமென்றிருக்கிறேன். நீ இன்றிரவே சென்னைக்குப் போ. உன் விலாசத்தைக் கொடு. இன்னும் நான்கு நாளில் நான் உன்னை வந்து சந்திக்கிறேன். உன்னைப் பார்க்கத்தான் சென்னைக்குப் புறப்பட்டேன். அதுதான் இங்கேயே பார்த்துவிட்டேனே. நாலு நாளில் நான் சென்னைக்கு வந்த பிறகு மற்றதைப் பேசிக்கொள்வோம்."

இப்படித் தன் நீண்ட பிரசங்கத்தை முடித்து, சூடாமணியின் விலாசத்தை வாங்கிக் கொண்ட தேசானந்தர் அன்றிரவே மேலூருக்குப் புறப்பட்டார். சூடாமணியும் சென்னைக்குப் புறப்பட்டான்.

மேலூருக்கு வந்து சேர்ந்த தேசானந்தர் இரவு ஒரு மணிக்கு வீட்டுக்கு வந்து பெட்டியை வைத்துவிட்டுப் படுத்தார். அசதியாக இருந்ததால் காலை எட்டு மணி வரை தூங்கினர். திடீரென்று அவர் மனைவி கோமளம் வந்து அவரை எழுப்பினுள்.

"என்னங்க இது? உங்க பெட்டியைக் காணும்? வேறெ ஏதோ பெட்டியைத் தூக்கிக்கிட்டு வந்திருக்கிங்க?" என்றுள்.

தேசானந்தர் துள்ளி எழுந்து வந்து பார்த்தார். அங்கே அவர் பெட்டிக்குப் பதிலாக வேறு பெட்டி இருந்தது!



இவர்

'பச்சரவு காரணமாக நியாயத்தை மறக்கும் மனிதர்கள், தங்கடைய மனச்சாட்சியை மட்டிலும் க்கபலமாகக் கொண்டு பிரச்சினையை பரிசீலித்துப் பார்த்தால் நீதி தெளிவாகத் தெரியும். உலகின் எல்லா நீதிமன்றங்களைக் காட்டிலும் மனச்சாட்சியே சிறந்த— உயர்ந்த நீதிமன்றமாகும்."

தனக்கென ஒரு திட்டவட்டமான கொள்கையில்லாத கிருஷ்ணமாச்சாரிகள் எதிர்காலத்தில் தோன்றுவார்கள் என்று எண்ணித்தான் விக்டர் ஹியுகோ மேற்கண்டவாறு கூறினர் போலும்! தனது நெஞ்சை உயர்நீதிமன்றமாகக் கொள்ளாது பிறரது புகழ்பாடி, பிறரது நிழலிலேயே வாழ்க்கையைச் சிக்கலில்லாது ஓட்ட நினைப்பவர்கள், அரசியலை வைத்து ஓரளவு பிழைக்கமுடியுமே தவிர, தங்களது சொல்லுக்கு ஒரு சக்தியை ஏற்படுத்திக் கொண்டுவிட முடியாது. விரல்விட்டு எண்ணக் கூடிய இத்தகைய சுபாவத்தினரில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி மிக முக்கியமானவர். அவருக்கு நினைவு தெரிந்த நாள் முதற்கொண்டு இன்றுவரை டி. டி. கே. யார் தனது கருத்து இன்னது என்று துணிந்து கூறியதில்லை. கூறினால் குந்தகம் விளையுமோ என்ற கோழைத்தனம் அவரை இன்றுவரை ஆட்டிப் படைக்கிறது வெள்ளையர் காலத்திலிருந்து! வெள்ளையர் நாடாண்ட காலத்தில் அவர்களுக்கு விரோதமாக எதையும் சொல்லியறியாதவர் அவர். சொன்னால் தொழில் மூலம் கிடைக்கும் சுகவாழ்வு சூறையாடப்பட்டுவிடுமோ என்ற அச்சம் அவரை 'வளர்கடாகுட்டி'யாக்கி வைத்திருந்தது.

சுவைதரும் நூல்கள்!
எஸ்.எஸ்.தென்னரசு எழுதிய
தேவாலயம் ரூ 1-4-0
சந்தனமழை " 1-0-0
கண்மணி 1-0-0
நாரணதுரைக்கண்ணன் எழுதிய
புதுமைப்பெண் ரூ 1-12-0
மேனகா 1-8-0
சதுரங்கம் 1-4-0
உலகப்பேரறிஞர்களின் மனமணம் ரூ 2-0-0
அருணோதயம்
சென்னை-14

தும்பைப்பூ நிறத் துகிலாடை தென்றலோடு கொஞ்சும். வாசனைத் திரவியங்கள் வாடையை அள்ளிவீசும்-இப்படித்தானிருந்தார் அந்த நாட்களில் டி. டி. கே. ஆச்சாரியார்! 1936ல் ஆச்சாரியார் மந்திரிசபை ஏற்றிருந்த போது காங்கிரசை முறியடித்து எதிர்க்கட்சி உறுப்பினரானவர் டி. டி. கே. என்றால் யாரும் ஆச்சரியப்படத்தான் செய்வார்கள். அவரா இன்று தேசியம் பேசுகிறார், அவரா இன்று காந்தியோ பரம ஏழை சந்யாசி என்று பரிதாபப்படுகிறார் என்று எண்ணிப் பார்க்கும்போது, இன்னொரு நாளைக்கு தென்னாடு தனி நாடாகி விட்டாலும் அன்று இந்த டி. டி. கே. என்ன சொல்லுவார் என நினைத்துப் பார்க்க நமது நெஞ்சு தாவிக் குதிக்கிறது! ஒரு வேளை, துகில்,



தடித்த கதரானதுபோல, கதர் கைத்தறியாகி அவர் உடம்பைப் போர்த்திக் கொள்ளக் கூடும்.

"குறுக்கு வழியில் சுகவாழ்வு பெற முயலுவது விரும்பத்தகாதது; உழைப்பும் சேவையுமே பலனளிக்கும்" என்று காமராஜர் அடிக்கடி சொல்லுகிறார். ஆனால் அவரது துதி பாடித் திரியும் டி. டி. கே. எந்த உழைப்பின் பேரால், எத்தகைய சேவையின் பேரால் சுகவாழ்வு பெற முடிந்தது? டி. டி. கே.யின் உழைப்பு காங்கிரசாரை வெள்ளையரிடம் காட்டிக் கொடுத்தது! அவரது சேவை, இருக்கின்ற தொழிலகங்களில் எல்லாம் பங்கு பெற்றது! இவை தவிர அவரது சேவை என்ன? எந்தச் சத்தியாக்கிரகத்திலே அவர் பங்கேற்றார்? எத்தனை முறை சிறை சென்றிருக்கிறார்? விலங்கை அவர் பார்த்ததுண்டா? போலீஸ் தடி அவரது மேனியைப் பதம் பார்த்ததுண்டா? அவர் அலங்காரமாகத் தினசரி சுற்றுலா வந்து, ஆங்கில நாட்டுத் துரைகளோடு கைகுலுக்கி அளவளாவி ஆஸ்திக்கு வழிதேடிக் கொண்ட டி. டி. கே. அந்த வேடத்தை இன்னும் கலைத்துக்கொள்ள வில்லை. கைகுலுக்குவது இன்னும் குறையவில்லை; கள்ளப் பார்வை இன்னும் மறையவில்லை; வணிக நோக்குத்தான் மங்கிற்று? இத்தனையும் முன்னைக் காட்டிலும் வளர்ந்தல்லவா இருக்கிறது! அந்நியக் காலம் வரை, ஆட்சிபீடத்திற்கு வருவோரின் அணைப்பிலே இருந்து விட்டுப்போக எண்ணுவோர் எதையும் உறுதியாகவோ, உண்மையையோ பேச முடிவதில்லை என்பதற்கு டி. டி. கே. யின் செயல்முறைகள் எதிர்கால அரசியலில் 'ஜே' போடுவோருக்கு பயங்கர அறிவிப்பாகும்!

டி. டி. கே. தனக்கென ஒரு கொள்கை இல்லை என்கிறார்; அவரே சொல்கிறார். தலைவர்கள் எது சொன்னாலும் நான் ஆதரிப்பேன் என்கிறார். டில்லி ஆதரிக்கும் தட்சிணப் பிரதேசத்தைக் காமராஜர் எதிர்க்கிறார்; ஆகவே, காமராஜரை ஆதரித்தால் டில்லிப் பகையும், டில்லியை ஆதரித்தால் காமராசர் பகை ஏற்படும் என்ற அச்சத்தில் டி. டி. கே. தட்சிணப் பிரதேசம்பற்றித் தான் ஒன்றும் கூறப் போவதில்லை; தலைவர்கள் விட்ட வழி என்று கூறிவிட்டார். படித்துப் பட்டம் பெற்றவர்கள் கூட தனக்குச் சிந்திக்கத் தெரியாது என்று சொல்லும்அடிமைத்தனம் நிறைந்த பேச்சைத் தமிழ்நாட்டிலேதான் நாம் பார்க்கிறோம்!

"சென்னை ராஜ்யத்"திற்கு 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க முன் வராததற்கு நான் முதல் மந்திரி காமராசருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று சென்னை நகராண்மைக் கழகத்தில் துணிந்து பேசிய டி. டி. கே. தட்சிணப் பிரதேசம்பற்றி மட்டும் ஏன் தன் சொந்தக் கருத்தைத் தெரிவிக்க முன் வரவில்லை? தான் இருக்கும் இடம் டில்லி! ஆகவே டில்லியை எதிர்க்கக் கூடாது! தனது வழிகாட்டி காமராசர்! ஆகவே காமராசரை எதிர்க்கக் கூடாது! 'இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன?' என்ற சுகந்தேடிகளின் சித்தாந்தத்தை டி. டி. கே. அணுவும் நழுவவிடாது கடைப்பிடிப்பதிலே புத்திசாலி! 'மஹா' புத்திசாலி!

எதை எந்த நேரத்தில் எப்படிப் பேசினால் பொதுமக்களுடைய ஆதரவு கிடைக்கும் என்று திட்டம் வகுத்துக் கொண்டு பேசுவதிலே டி. டி. கே. கைதேர்ந்தவர். தமிழ்நாட்டில் ஒரு குழப்பமென்றால் அதற்கு நேருவிடமிருந்து அவர் கையாலே தயாரிக்கப்பட்ட மூலிகையைக்கொண்டுவந்திருப்பதுபோல் நடிப்பார். தமக்கு அந்தக் குழப்ப விஷயத்தில் சம்பந்தமில்லாவிட்டாலும்,டில்லியிலிருந்து தற்செயலாக வருவது போல் சென்னைக்கு வந்து, அந்தக் குழப்பத்தைத் தீர்த்து வைக்கும் பஞ்சாயத்தாரில் ஒருவராக எப்படியோ இடம்பெற்று விடுவார். பலமுறை முகத்திலும் கரி பூசிக்கொண்டிருக்கிறார்.

நேருவுக்கு-கிருஷ்ணமேனன், காமராஜருக்கு - கிருஷ்ணமாச்சாரி,என்பார்கள் அதெப்படிப் பொருந்தும்?

காமராசருக்கும் டி. டி. கே. யிக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது? ஆச்சாரியாருக்கும் டி. டி. கே. யிக்கும் எப்படி விரோதம் முளைத்தது?

எதிரிக்கு எதிரி நண்பன் என்றபோர் முறைதான்!

நன்றி!

திருக்கோஷ்டியூரில் நடந்த எங்களது திருமணத்திற்கு நேரில் வந்திருந்தும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் எங்களை கௌரவித்த நண்பர்களுக்கும், பத்திரிகைத் தோழர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஏ. எஸ். மூர்த்தி-சேதுலக்ஷ்மி
உதவி ஆசிரியர் 'சித்ரா'

சென்னை-17
10-7-56

வாழ்க!

10-6-56 ஞாயிறு அன்று மதுராந்தகம் தி. மு. க. கட்டிடத்தில் செயலாளர் பி. சிவானந்தம் தலைமையில் தோழர் பி. ஆட்சிக்கும் தோழியர் முத்தாம்பாளுக்குப் விதவை சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. அதுபோது ஓ. என். துரைபாபு (பஞ்சாயத்துப் போர்டு தலைவர்) ஆதிசேடன், சி. சேகர், எ. கோவிந்தசாமி, சி. வி. எம். அண்ணாமலை முதலியோர் விதவைத் திருமணம் பற்றியும் வாழ்த்தியும் பேசினர்.

உய்வோம் வாரீர்!

— துரை. மாணிக்கம் —

—◉—

தமிழ்நாட்டைத் தமிழ்நா டென்னத் தமிழரில் மறுப்பார் தம்மை
துமிழுங்கள் காறி! அன்ன உலுத்தரை உடனே மாய்ப்பீர்!
தமிழ்மக்கள் குடலை உண்டு தமிழர்க்கே தீங்கு செய்யும்
தமிழனைத் தமிழன் என்று தவறியும் கூறு தீர்கள்.

தென்னாட்டுப் பணத்தைத் தூக்கித் தில்லியார்க் கனுப்பி விட்டே,
பின்னாட்டம் போடு வாரைப் 'பேடி'யென் றுரைப்பீர்! இன்னும்
சின்னாட்கள் கழித்தன் னாரின் சீட்டினைக் கிழிப்பீர்! ஆகி
நன்னாட்டைக் காப்பீர்; காத்து நந்தமிழ் அரசுண் டாக்கீர்!

நாட்டினைப் பிரித்தல் தீதென் றியம்புவார், தெலுங்கு பேசும்
நாட்டினிற் குரிமை தந்த நியாயமென்? நாமெல் லோரும்
கூட்டமிட் டுரைப்ப தென்ன என்பதற் கெவரும் காணோம்!
ஏட்டினில் எழுதித் தீர்த்தோம்; ஏனென்று கேட்பார் இல்லை!

இந்தியைக் கற்கக் கட்டுப் பாடில்லை என்றார்; ஆனால்
இந்தியைப் புகுத்து தற்கே இருந்தநா ணயத்தை மாற்ற,
'மந்திரி' என்பா ரெல்லாம் மடம்பேசி நிற்பார்; அன்னார்
தொந்தியை வளர்ப்ப தற்குத் தமிழினை அடகு வைத்தார்!

கடந்துள்ள ஆண்டி லெல்லாம் கணக்கிட்டால் தமிழ்நாட் டார்க்கு,
நடந்துள்ள கொடுமை மிஞ்சும்! நரிகளின் அமைச்சால், நாட்டில்
படர்ந்துள்ள தீமை, எண்ணப் படுதற்கொண் ணாதே! இன்னும்
தொடர்ந்துள்ள திட்ட மெல்லாம் உமிழுட்டை; எவ்வா றுய்வோம்?

தனியர சேற்போம்! அன்றித் தமிழராய்ப் பொருதி மாள்வோம்!
இனியர சாளு வோர்கள் ஏய்த்திடு வார்கள்! நாமும்
முனியாது நின்றால் மாற்றார் மிதிபட்டே இறந்து போவோம்;
'குனிதொழில் வேண்டாம்' என்ற கொள்கையில் உய்வோம் வாரீர்!

சோனால்

முகப்பரு வேனல்கட்டி, சேத்துப்புண், பித்தவெடிப்பு, தீப்பட்டபுண், சொரிசிறங்கு, கக்கூஸ் பத்து, வெட்டுக்காயம் முதலிய சருமவியாதிகளைக் குணப்படுத்துவதில் நிகரற்றது.

எங்கும் கிடைக்கும்.

ஆரன்ஸ்

கிரைப் டில் வாட்டர்

குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுவலி, வயிற்றோட்டம், மாந்தம் முதலிய அஜீரணக் கோளாறுகளைப் போக்கி ஆரோக்கியத்தை உண்டாக்கும்.

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:

தி பாரத் டிரக் ஹவுஸ்,

மதுரை.

ஈழங்கொண்ட...

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

"கவலைப்படாதே! சிங்காதனம் கிடைக்காமலே போய்விட்டாலும் குயினி உனக்குத்தான். இராசாதிராசன் எனக்கு அந்த ஆணையை இடவில்லை என்றாலும் எனது கடமையிலே தலையாய கடமையாக இதனை நான் கவனிப்பேன்"-என்றான்.

ஒரு படகு முன்னாலே புறப்பட்டு உளவறியச் சென்றது. சீவல்லபனும் அம்மையப்பனும் அலங்காரப் பெரும்படையில் அமர்ந்து உணவுண்ணத் தொடங்கினர். வறுத்த மீனும் பதமாகச் சமைக்கப்பட்ட சோறும், குழம்பும் கலந்து சுவையோடு உண்ணத் தொடங்கினார்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது தட்டிலே முழுசாக வறுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கெண்டை மீன்களைப் பார்த்ததும் சீவல்லபனுக்கு ஒரு கற்பனை தோன்றிற்று.

"மீன்களை மனிதன் வறுக்கிறான். மனிதனை மீன்கள் வறுக்கமுடியுமா?" என்று கேட்டான் அம்மையப்பனைப் பார்த்து.

"அதெப்படி முடியும்? மீன் எங்கே, மனிதன் எங்கே?" என்று சிரித்துக்கொண்டே பதில் கேள்வி தொடுத்தான் அம்மையப்பன்.

"முடியுமென்கிறேன் நான்" என்று உறுதியாகச் சொன்னான் சீவல்லபன். ஆச்சரியமாக அவனை நிமிர்ந்து பார்த்தான் அம்மையப்பன்.

சீவல்லபன் சொன்னான்: "என் குயினியின் கண்கள் என்னை வறுத்துக் கொட்டிவிட்டனவே!"

அம்மையப்பன் சிரித்தான். "அதே நினைவு! பாவம்! இன்னும் இரண்டு நாட்களுக்குள் அவள் உனக்கு. அஞ்சற்க" என்றான். சிறிதுநேரம் மவுனம் நிலவியது.

இப்போது அம்மையப்பனுக்கு ஒரு கற்பனை தோன்றியது. "கொடியை வறுத்துச் சாப்பிட முடியுமா?" என்று கேட்டான் சீவல்லபனைப் பார்த்து.

"அதெப்படி முடியும்? கொடி வெறும் துணியாயிற்றே" என்றான் சீவல்லபன்.

"முடியும்! இதோ பாண்டியன் கொடியை வறுத்துச் சாப்பிடுகிறோமே" என்று மீனைக்காட்டினான் அம்மையப்பன். இருவரும் கலகலவெனச் சிரித்தார்கள். பேச்சு வாக்கில் குயினியிடம் தனக்குள்ள காதலை மீண்டும் விளக்கினான் சீவல்லபன்.

ஒருமுறை அவனும் குயினியும் யாழ்ப்பாணத்திற்குப் போயிருந்தார்களாம். அங்கே பறவைக் கடலில் இருவரும் நீந்தி விளையாடினார்களாம். குயினியை அவன் கட்டிப்பிடித்து நீச்சல் பழக்கிக் கொடுத்தானும். திடீரென்று தண்ணீருக்குள் மூழ்கிய குயினியை ஏதோ ஒரு நீர்ப்பூச்சி உதட்டில் கடித்துவிட்டதாம்! குருதி சொட்டச் சொட்ட குயினி எழுந்து நின்று கதறினாளாம். உடனே சீவல்லபன் அவள் உதட்டில் உதட்டை வைத்து உறிஞ்சி குருதியைத் துப்பினானும். பிறகு காயம் ஆறிவிட்டதாம். எப்போதும் குயினி அதையே குறிப்பிடுவாளாம். அவன் கைகள் மெத்தென்றிருக்குமாம். தொட்டால் பூப்போல் துவளுமாம். அவனைக் காணாவிட்டால் சாப்பிடவே மாட்டாளாம்.

இதையெல்லாம் அவன் சொன்னபோது அம்மையப்பன் வாயைப் பிளந்து கேட்டுக்கொண்டிருந்தான். ஏனென்றால் அவனும் காதலித்துத் திருமணம் செய்துகொண்டவன்தான். அவன் காதலி படுசுட்டி. வெகு காரமாகப் பேசுவாள். காரணம் அவள் ஆந்திர நாட்டிலிருந்து வந்தவள். அதையும் அவன் சீவல்லபனிடம் குறிப்பிட்டான். இப்படியே இருவரும் சிரித்துப் பேசிக்கொண்டு உணவை முடித்தார்கள்.

எழுந்து படகின் முன்புறம் வந்து நின்றார்கள். பாண்டிய மண்டலக் கரையோரத்திலிருந்து ஒரு படகு ஈழநாட்டின்மேல் கரையோரமாகப் போவது தெரிந்தது. அதன் எதிரே ஒரு படகு தங்கள் படகை நோக்கி வருவதும் தெரிந்தது. திகைப்போடு அவர்கள் இருவரும் படகையே உற்றுநோக்கியவாறு இருந்தார்கள். தங்களை நோக்கி வந்த படகில் உளவறியப்போன ஒற்றர்கள் வருவதைக் கண்டார்கள்.

வந்த ஒற்றர்கள் ஊராத்துறை பற்றிய சேதி கொண்டுவந்தார்கள். பாராக்கிரமபாகு மாதோட்டத்திலே இருக்கிறான் என்றார்கள். எதிரே போகும் படகில் குலசேகர பாண்டியன் தனியாகப் போவதாகக் கூறினார்கள். அதோடு, குயினிக்குத் திருமண ஏற்பாடு நடைபெறுவதாகவும் கூறினார்கள்.

குலசேகரன் தனியாகப் போவானேன்?-அம்மையப்பன் திகைத்தான்.

குயினிக்குத் திருமணமா?-சீவல்லபன் திகைத்தான்.

(தொடரும்)

விரைவில்!

டி. கே. சீனிவாசன்

எழுதும்

சிறு கதைகள்

தென்றலில் தொடர்ந்து

வெளிவரும்.

ஐதராபாத்தில் பேசினார்!

தற்பெருமைக்காரர்கள் பிறரைத் தாழ்த்தி, தங்களை உயர்த்தியே பேசுவார்கள். எதிரே இருப்போரின் முகபாவத்தைக் கூட அவர்கள் கவனிப்பதில்லை. என்னைப் போலுண்டா என்பார்கள்; எதிலும் நான் வல்லவனென்பார்கள்.

வேறு சிலர் இருக்கிறார்கள்; அவர்கள் தற்பெருமையைக் கொஞ்சம் நாசுக்காகக் கையாளுவார்கள். கந்தசாமி தன்னை அதிகம் புகழவேண்டும் என்பதற்காக, கந்தசாமியைப் பற்றிக் கொஞ்சம் புகழ்ந்து வைப்பது. கந்தசாமி தன்னைப் புகழ்வான், தன்னுடைய குற்றங்களைக் கூற மாட்டான் என்று எண்ணுவோர் இன்றைய அரசியலில் குறைவு தான் என்றாலும் அந்தக் குறைந்தவர்கள் பட்டியலில் குடியரசுத் தலைவர் பங்கேற்பது கூடாது தான்; விரும்பத் தகாததுதான். கந்தசாமி புகழ்ப்பசி எடுத்தலையும் பேர்வழியானால் எதிரினைத்தது கைகூடலாம்; ஒரு வேளை கந்தசாமி, உண்மையிலே நல்லோரைப் புகழும் பண்பும், தன்னைப் புகழ்ந்தாலும், புகழ்ந்தவன் புனைசுருட்டுக்காரனாக இருந்தால் குத்திக் காட்டும் கின்றன, அவை சமஸ்கிருதத்தினின்று தோன்றவில்லை. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய இம்மொழிகள் திராவிட அடிப்படையைக் கொண்டன—

இது அவருடைய சொற்பொழிவின் அடுத்த கட்டம். வடமொழியே மூலமொழி, வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமையை உருவாக்கும் மொழி என்று அவர் பிரலாபித்துக் கொண்டு போகையில் தமிழ் பற்றியும், திராவிடம் பற்றியும் பேசவேண்டிய அவசியம் என்ன என்று நமக்குப் புரியவில்லை. "பிரசாத், நீங்கள் பேசுவது தவறு. தாரணி வளர்த்த மொழி தமிழ்தான், வடமொழி அல்ல" — என்று அவரது உள்ளொளி குடைந்திருக்க வேண்டும். அந்த எண்ணங் கொண்டோரும் கூட்டத்தில் இருப்பரே என்றஞ்சி பிரசாத் அந்தத் 'துணைப் பிரசங்க'த்தைச் செய்திருக்க வேண்டும். அல்லது தமிழைக் கொஞ்சம் புகழ்ந்துவிட்டால் போதும், தமிழர்கள் உண்மையையும் மறந்து வடமொழிதான் மூல

வடமொழி மூலமொழியாம்! பொறுப்புள்ள அப்பாவி என்று எதிர்க்கட்சிக் காரர்களால் ஓரளவு மதிக்கப்படுகிற பெருந் தலைவர் கூறுகிறார். கற்றறிந்தவர் அவர் என்று படித்திருக்கிறோம்; குற்றங்கண்ட விடத்துக் கண்டிக்கும் சுபாவமுடையவர் என்றும் சொல்வார்கள் அன்றெல்லாம்; அவர் பேசுகிறார்— பழம் பெரும் சமுதாயம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் ஒரே ஒரு கவுரவத்தை—உலகினிற்கே மொழி கொடுத்தது என்ற கவுரவத்தை-மறைத்துப் பேசுகிறார்! வடமொழி, வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை நிலவிடச் செய்கிறதாம்! டில்லியிலே இருக்கிறவர்கள் வடமொழி கற்றிருக்கலாம்! திசை தவறி ஓடிவந்த தென்னாட்டுப் பார்ப்பனர் வடமொழி கற்றவர்களாக இருக்கலாம். தென்னாட்டுக் கலாச்சார வேற்றுமை. இது ஒற்றுமைப்படுத்துவதாகவா அர்த்தம்! அல்லவே! உண்மை

ஒற்றுமை! வடமொழி இந்தத் தத்துவ வெற்றிக்குத்தான் தென்னாட்டில் பேசப்பட்டு வருகிறதா?

—பிரசாத் சொல்கிறார் வடமொழி ஒற்றுமை வளர்க்கிறது என்று. இந்து சாம்ராஜ்யத்தை, ஐதிக சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த முயலும் வடமொழியின் சதிவேலைக்குத்தான் ஒற்றுமையானால், அந்த 'விஷ ஒற்றுமை' நிச்சயமாகத் தமிழ்நாட்டில் படுசூரணமாக்கப்படும் என்பதை முன்கூட்டியே தெரிவித்துக் கொள்கிறோம்.

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும் — ஆரியம்போல் உலகவழக்கழிந்தொழிந்து சிதையா உன்—சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்று மனோன்மணியம் புத்தொலி கிளப்பத் தொடங்கி விட்ட பிறகு, புலவர் பெருமக்கள் மொழி முன், ஆச்சாரம் பிறகு என்று ஆர்த்தெழுந்த

அமுதமொழியை மறந்தார்; அவர் மொழியைப் புகழ்ந்தார்!

துணிவும் கொண்டவனாக இருந்தால்...? புகழ்வான் கந்தசாமி என்று எதிர்பார்த்தவர் உளம் வெதும்பியல்லவா சாகவேண்டும்!

இந்தியத் துணைக்கண்டத்தின் குடியரசுத் தலைவர் இராஜேந்திரர் தமிழகத்தைக் கந்தசாமியாக்க நினைத்தார்! எந்தக் கந்தசாமியாக? நல்லோரைப் புகழும் கந்தசாமியாக அல்ல! புகழ்ப்பசி எடுத்தலையும் கந்தசாமியாக!

ஐதராபாத்தில் சமஸ்கிருதக் கல்லூரிக் கட்டிடக் கால்கோள் விழாவில் அவர் பேசியிருக்கிறார். பேச்சு பத்திரிகைகளில் வெளி வந்திருக்கிறது. "இந்தியாவில் பலதிறப்பட்ட வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை காணப்படுகிறது. அதற்கெல்லாம் மூல காரணம் சமஸ்கிருத மொழிதான்" என்று பேசியிருக்கிறார் குடியரசுத் தலைவர். சமஸ்கிருதத்தின் பெருமைபற்றிப் பேசிக் கொண்டு போனவர், தொடர்ந்து அதே க்ருத்தில் பேசிக்கொண்டு போகவில்லை. உலகம் ஒப்புக் கொண்ட ஒரு உண்மையை மறைத்துவிட்டு, தன் மொழிக்கும், தனது பகுதிக்கும் பெருமை தேடித்தரும் வகையில் பேசிக்கொண்ட ராஜேந்திரரை அவருடைய மனச்சான்று இடையிலே தடுத்து நிறுத்தியது போன்று அவரது சொற்பொழிவு நடைப்பட்டிருக்கிறது.

தென்னிந்தியாவில் நான்கு வலிமையுள்ள மொழிகள் இருக்

மொழி என்று எண்ணி விடுவார்கள், புகழ்ப்பசி கொண்டலையும் கந்தசாமிகளைப்போல, என்று ராஜேந்திரர் தப்புக் கணக்குப் போட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் வடமொழிபற்றி ஐதராபாத்தில் பேசும் ராஜேந்திரர் தென்னாட்டுக்குத்தான் தமிழ் முக்கியம் என்று பேச வேண்டிய அவசியம் என்ன வந்தது?

யைச் சொன்னால்—ராஜேந்திரர் சொல்லும் ஒற்றுமை, மற்ற மொழிகளை அழித்து விட்டு, மற்றக் கலாச்சாரங்களைக்கொலை செய்து விட்டு ஒரே வடமொழி ராஜ்யத்தை நிறுவ வடமொழி முயற்சிக்கிறது என்றுதான் நாம் பொருள் கொள்ள முடியும்.

ஒற்றுமை!—இந்தச் சொல் வடமொழிக்காரர்களால் செயல் படுத்திக் காட்டக்கூடியதா?

பிறகு--ஸ்பெயின் நாட்டு ஈராஸ் பாதிரியின் புகழ்முத்துக்கள் என்றென்றும் நமக்குச் சாட்சி சொல்லத்தயாராகிவிட்டபிறகு,- உலகமொழிகள் அத்தனையிலும் தமிழ்ச் சொற்கள் சிதறிக் கிடக்கின்றன என ஆங்கில ஆராய்ச்சியாளர் ரிஸ்டேவிஸின் வாக்கு மூலம் கொடுத்திருக்கும் போது இராஜேந்திரரின் தவறான பேச்சு, தமிழை ஒன்றும் குறைத்துவிடப் போவதில்லை. பேச்செல்லாம் கொள்கையாக மதிக்கப்படும் இடத்திலிருப்பவர் பேசும் பேச்சா அது என்றுதான் விசனிக்கிறோம். தமிழ் மக்கள் புகழ்ப்பசி கொண்டு, முதுகைத் தடவினால் உரிமையை இழந்து விடுவோர் அல்ல என்பதையும் டில்லிக்காரர்கள் மறந்துவிடக் கூடாது. இனி வரும் உலகம், எப்படி நடக்கும்? மாதம் காதம் போகுமா? மனோவேகத்தில் சஞ்சரிக்குமா என்று எவராலும் முடிவுகட்டுவதற்கில்லாத வகையிலிருக்கிறது என்பதை, பலகோடிகளைத் தாங்கித் தாங்கிச் சலித்துப் போன மண்டபத்திலே இருக்கும் ராஜேந்திரர் மனதிலே வைத்துக் கொள்வது உத்தமம்! ★

எங்கும் ஏராளமாக விற்பனையாகின்றன!

1957-S. S. L. C. பொது-சிறப்புப் பகுதிகள் அனைத்திற்கும்

இரட்டையர் தமிழ் வினா விடை

198 பக்கங்கள் - விலை ரூ. 1-4-0

செல்வி பதிப்பகம், காரைக்குடி.

சென்னையில் உங்கள் தேவைக்கு:

P. T. BELL & CO.,

7. சுங்குராமச் செட்டி தெரு, சென்னை-1.



30. வட்டநிலாச் சுட்ட வடு.

வெண்பாப் போட்டி 30ன் பரிசு பெற்ற வெண்பாவையும் பிரசுரத்திற்குத் தகுதியுள்ள வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

★ அல்லிமலர்ப் பெண்ணை யடங்காத காமத்தால்
புல்லி யணைத்துப் புணர்மதியோன்-நல்லவனோ?
மட்டுலர்ந்து வாடும் மரையிதழில் பார்தோழி!
வட்டநிலாச் சுட்ட வடு.

—எம். எஸ். மணி, திருக்கழுக்குன்றம்

★

என்போன்ற பெண்களெலாம் இன்பக் கனவுலகில்
அன்போடு காதலரை ஆதரிக்க-என்கனவோ
கெட்டலைய இவ்வுலகில் கேலிமிகச் செய்ததடி
வட்டநிலாச் சுட்ட வடு.

—சி. பி. சாமி, அரக்கோணம்.

★

ஓட்டவந்த இந்தியினை ஓட்டநான் சாடுகையில்
பட்டபுண் நோகவில்லை பாதகரால்,-கட்டழகே!
சுட்டுப் பொசுக்குதடி தோகையுன் பால்வதன
வட்டநிலாச் சுட்ட வடு.

—கெ. எஸ். சுந்தரம், டாப்ஸிலிப்.

★

காதலித்த கன்னியரைக் காளையர்கள் தாமிழப்பின்
ஆதரவாய்ச் சாதலினை அன்புடனே-காதியற்றுத்
தொட்டணைப்பர் இந்நிலத்தில் தோன்றுதுபார் கன்னிமுக
வட்டநிலாச் சுட்ட வடு.

—ப. தமிழ்மாறன், மேலைச்சிவபுரி.

★

சூல்மேகம் தோற்கும் சுழற்கொண்டை யாளுன்வெண்
பால்நிலவும் வெண்றி பகருமோ?-கோல்வளையே
கட்டழகி யுன்கரங்கள் பட்டவுடன் மாறுமடி
வட்டநிலாச் சுட்ட வடு.

—இளசை-மாறன்.

★

சேல்விழிசேர் விற்புருவம் செவ்விதழோ டெண்ணுதலும்
நாள்பலவாய் வாட்டிடுதே நெஞ்சமதை-தாழ்குழலாள்
வட்டமுகம் என்நெஞ்சில் வைத்தணைத்தால் ஆறிடுமே
வட்டநிலாச் சுட்ட வடு.

—பி. தேவ அரசு, திருச்சி.

★

மென்மை உடல்தாங்கி பெய்தவும் என்கோவே
வன்மை யறியாத வஞ்சகரால்-தண்மையின்றி
திட்டமிட்ட வெஞ்சமரில் தாக்குண்ட புண்களெலாம்
வட்டநிலாச் சுட்ட வடு.

—வெண்ணெய்வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

★

முல்லைச் சிரிப்பியும் மொய்குழலே! என்கண்ணே
மெல்லநீ என்பக்கம் வாராயோ?-மெல்லியளே,
கொட்டும் எழில்முகத்தைக் கூறிடுவேன், அஃதேதான்
வட்டநிலாச் சுட்ட வடு.

—இரா. வடிவேல், ஈரோடு.

மட்டில்லா இன்பமுடன் மாந்தோப்பில் நாமிருவர்
தொட்டுச் சுவைத்தசுகம் சொல்லிடவே-திட்டமுடன்
கட்டிக் கரும்பு வளருதத்தான்! அச்செல்வம்
வட்டநிலாச் சுட்ட வடு.

—க. வேழவேந்தன், சென்னை-31.

★

கண்ணம்பால் எய்தால் கவலையில்லை வாய்ச்சொல்லின்
எண்ணந்தான் என்றே இனிதிருப்பேன்-இன்னொருகால்
பட்டாலும் ஆறிவிடும் பாவை முகமென்னும்
வட்டநிலாச் சுட்ட வடு.

—ப. கனகநிதி, செய்யூர்புரம்.

★

அந்நாள் நிலவிரவு அப்புலியின் [illegible]
சந்நிலையைத் தான் [illegible]
படுமிடமெலாம் முகத்திற் பார்த்தேனே [illegible]
வட்டநிலாச் சுட்ட வடு.

—ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

★

கண்ணே யுனையெந்தன் கைப்பிடிப்பே னென்றிருந்தாய்
பண்ணே யுனைவிடுத்தேன் மாண்பறியேன்-எண்ணமிலாத்
துட்ட னழித்திடினும் தோன்றிடுதே நின்முகமாம்
வட்டநிலாச் சுட்ட வடு.

—அ. கிருஷ்ணன், சரவணபட்டி.

★

கல்லக் குடிக்களத்தில் கால்வடுவும், தேவிகுளம்
வெல்ல விலாவடுவும் பெற்றேன்-முல்லையிதழ்
மொட்டவிழ உள்ளத்தில் மூள்வடுவே திஞ்சொல்லின்
வட்டநிலாச் சுட்ட வடு.

—மு. தங்கராசன், பொன்பரப்பி.

★

வட்டநிலா என்றெண்ணி வாழ்ந்திருந்த ஈழத்தில்
சுட்டெரிந்தார் தென்ன வரைச் சொல்லமனம்-
வெட்குதய்யோ
பட்டுப்போ காமராஜர் பார்வையில் ஈழமென்னும்
வட்டநிலாச் சுட்ட வடு.

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

★

அன்னை வெகுண்டெழுந்தால் ஆரியம் போயொழியும்
வண்ணத் தமிழ்ப்பயின்றால் வாதனைகள்-பண்ணாரும்
கட்டழகுச் செவ்வர் கரபட்டால் இலங்கும்
வட்டநிலாச் சுட்ட வடு.

—சி. சிவராமலிங்கம், சென்னை-1.

★

ஆய களங்கள் அனந்தம் புறங்கண்டு
தாயகத்தைக் காத்திட்ட தார்வேந்தே!-தூய்குருதி
கொட்டிப் புகழ்வடுக்கள் கொண்டவர்யான் பெற்றதுவோ
வட்டநிலாச் சுட்ட வடு.

—கு. மல்லிகை, சென்னை-1.

★

தும்பை மலர்காணும் தூவெண் முகிலே!நீ
கூம்பாப் பருவத்தேன் சூல்கொண்டாய்?-கம்பிமதி
கெட்டுநச் சுப்பை சுமந்தேன் என்செய்வேன்?
வட்டநிலாச் சுட்ட வடு.

—து. பெருமாள், சென்னை-11.

★

வெட்டிட்ட காயமும் வேல்பாய்ந்த வண்குழியும்
பட்ட நகக்குறிக் கிடாமோ-பொட்டின்கீழ்
பட்டவடு என்னென்றாய் தோழி அதுவாஓர்
வட்டநிலாச் சுட்ட வடு.

—மு. சிதம்பரன் திருவையாறு.

★

பட்டாளத் தன்னியரை பாய்ந்துவரும் அம்புகளால்
பட்ட வடுக்கள் பறந்தனவே!-சட்ட முகி
இட்ட களிமுத்தம் ஆமினே! அம்முத்தம்
வட்டநிலாச் சுட்ட வடு.

- மூர்த்தி, அகரப்பேட்டை.

★ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு. சென்னை-6.